இலவசப் பிரதி
Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

IIS இன்
கணனிக் கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில்திட்டம்-2003
விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் IIS அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி : 15.12.2002
சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள் !
கணனிக்கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.
(சி-259)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 25 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 06 (11.12.2002) புதன்கிழமை இதழ் : 71

## நெல்லியடியில் பொலிஸாரின் அடாவடித்தனம்

# மறியல் செய்த மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்!

## ஒன்பது பேர் காயம்; 17 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

**வடமராட்சி நெல்லியடி நகரில் பொலிஸார் பொதுமக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலினால் ஒன்பது பொதுமக்கள் காயமடைந்தனர். அத்துடன் பன்னிரண்டு பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

நேற்றுக்காலை 11 மணியளவில் நெல்லியடிப்பகுதி வெகுஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீதும் நெல்லியடிப் பகுதியிலுள்ள கடைத்தெருக்களில் நின்றவர்கள் மீதும் பாதசாரிகள் மீதும் பொலிஸார் கண்மூடித்தனமான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர்.

அத்துடன் பொதுமக்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசியதுடன் குண்டாந்தடிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதல்களின் போதே ஒன்பது அப்பாவிப் பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்

(10ஆம் பக்கம் பார்க்க)



நெல்லியடியில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களும் தடுக்கும் பொலிஸாரும். (மேலும் படங்கள் 09ஆம் பக்கத்தில்)

### நாளை குடாநாட்டில் ஹர்த்தாலுக்கு அழைப்பு

நேற்று நெல்லியடியில் நடைபெற்ற பொலிசாரின் தாக்குதல்களைக் கண்டித்து நாளை குடாநாடு எங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்க யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

இதில் அனைத்துத் தரப்பினரையும் பங்குபற்றி ஹர்த்தாலுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி ஒன்றியம் கேட்டுள்ளது.

## சுவிஸ்ஸில் புலிகள் பல சுற்றுப் பேச்சு



(பேர்ன்)

சுவிஸ் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் அங்கு பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

சுவிஸ் அரசின் வெளிவிவகார அமைச்சின் அரசியல் பிரிவின் தலைவர் பீற்றர் மோறோஸ், வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரி என்கொய், வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த மார்க்கோஸ் ஹனிகர், சுவிஸ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பிரதிநிதி வெலினா டொல்ட் ஆகியோருடன் ஒரு கலந்துரையாடலும் -

சுவிஸ் நாட்டின் முரண்பாட்டுக் கற்கைகளுக்கான நிறுவனமொன்றின் தலைவரான கராந்தி நொவட் றொயஸ் உடன் (10ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் கைதானோர் நள்ளிரவு நீதிபதி முன் ஆஜர்!

(நெல்லியடி)

நேற்று நெல்லியடியில் நடைபெற்ற பொலிஸாரின் தாக்குதலைத் தொடர்ந்து பதின்நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் நேற்று நள்ளிரவு நீதிபதி முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று முன்னிரவு யாழ். போதனா மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டனர். அனைவரையும் பரிசோதித்த சட்ட வைத்திய அதிகாரி ஐந்து பேரை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கும்படி உத்தரவிட்டார். எனினும், பொலிசார் அதற்

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அஹிம்சைக்கு அடாவடிதான் பதிலெண்டால் அடுக்காது கண்டியளோ..

## மூடிக் கிடந்த கடையைத் திறந்து பொலிஸார் துப்பாக்கிச் சூடு!

(யாழ்ப்பாணம்)

மூடிக்கிடந்த கடையொன்றினைத் திறந்து உள்ளே இருந்த கடை உரிமையாளர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அக்கடை உரிமையாளர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நெல்லியடி நகரில் நேற்று நண்பகல் நடைபெற்ற இச்சம்பவத்தினால் அருள்நாயகி கடை உரிமையாளரான கந்தர் பாலகிருஷ்ணன் (வயது 24) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரின் கடை வாசலில் வைத்தே

(10ஆம் பக்கம் பார்க்க)

## மூவர் மோசமான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி!

(நெல்லியடி)

நெல்லியடியில் நேற்று பொதுமக்கள் மீது பொலிஸார் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் ஒன்பது பேர் காயமடைந்தனர். இவர்களில் மூவர் படுகாயமடைந்துள்ளனர். படுகாயமடைந்தவர்கள் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். காயமடைந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு-

வேலுப்பிள்ளை தவச்செல்வம் - வடமராட்சி கிழக்கு (25), செல்வ

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.பி.சி. நிருபர் மீதும் பொலிஸார் தாக்குதல்!

(நெல்லியடி)

நெல்லியடியில் நேற்று பொலிஸார் நடாத்திய தாக்குதலின் போது யாழ்ப்பாணத்துக்கான ஐ.பி.சி. வானொலிச் செய்தியாளரும் பலத்த காயமடைந்தார்.

வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஐ.பி.சி. செய்தியாளரான வேலுப்பிள்ளை தவச்செல்வம் (வயது 28) என்பவர் நேற்றைய சம்பவத்தின் போது முகம், தலை போன்ற அங்

(10ஆம் பக்கம் பார்க்க)

### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம்

## மனித உரிமை ஆணைக்குழு முன் மறியல் செஞ்சிலுவை அலுவலகத்துக்குப் பேரணி

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினமாகிய நேற்றைய தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டமும் மகஜர் கையளிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மனித உரிமைகள் பிரகடனத்தின் 54 ஆவது ஆண்டு நேற்று அனுஷ்டிக்கப்பட்ட வேளை, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் யாழ்ப்பாண மனிதநேய அமைப்பினரும் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினரும் மகஜர்களை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி றொகான் சந்திரசேகரவிடம் கையளித்துள்ளனர்.




கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் நேற்றுக்காலை மனித உரிமைகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் மாணவர் மலர், குறைதீர் மன்றம்

# அரச மரியாதையின்றி நாகப்பா உடல் அடக்கம் கலவரம் வெடிப்பு; வாகனங்களுக்குத் தீவைப்பு!

(பெங்களூர்)

வீரப்பனால் கடத்தப்பட்டு, துப்பாக்கிச் சண்டை நடுவே கொல்லப்பட்ட முன்னாள் கர்நாடக அமைச்சர் நாகப்பா இறுதிச்சடங்கில் அரசு சார்பில் யாரும் கலந்துகொள்ளக் கூடாது என்று அவருடைய ஆதரவாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனால் கர்நாடக முதல்வர் உட்பட எவரும் வரவில்லை. அஞ்சலி செலுத்த வந்த மந்திரிகள் ஒரு அறையில் வைத்துப் பூட்டப்பட்டனர். அரசு மரியாதை இன்றி நாகப்பா உடல் அடக்கம் செய்யப்பட்டது. பல இடங்களில் பஸ், வான் எரிப்பு, துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடந்தன.

முன்னதாக நேற்றுமுன்தினம் நாகப்பா இறந்த செய்தி பரவியதும், நாகப்பா ஆதரவாளர்கள் அவரது சொந்தக் கிராமமான காமகரேயில் திரண்டனர். ஆத்திரமடைந்த அவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். 3 பஸ்களுக்குத் தீ வைத்தனர். 2 வான்களும் எரிக்கப்பட்டன. தமிழகத்திலிருந்து சென்ற லொறிகள் மீது கற்களை வீசினர்.

அங்குள்ள பொலிஸ் நிலையம், துணைப்பதிவாளர் அலுவலகம், கடைகளும் தாக்கப்பட்டன. பொலிஸ் நிலையம் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் எரிக்கப்பட்டது.

கலவரம் கட்டுக்கடங்காமல் போகவே பொலிஸார் தடியடி நடத்தினர்.

நிலைமை மேலும் மோசமானதால், வன்முறைக் கும்பலைக் கலைக்கப் பொலிஸார் பல சுற்றுத் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதனால் மக்கள் கூட்டத்தினர் கலைந்து ஓடினர்.



ஆர்ப்பாட்டக்காரர்களைத் துரத்தும் கர்நாடகப் பொலிஸார்

துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்ததாகப் பொலிஸார் கூறினர்.

நாகப்பா வீட்டின் முன், காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்த 2 பொலிஸாரை ஆர்ப்பாட்டக்காரர்கள் உயிரோடு கொளுத்த முயன்றனர். அவர்கள் நாகப்பா வீட்டுக்குள் ஓடி ஒளிந்து தப்பினர். பொலிஸ் தடியடியிலும் கலவரத்திலும் சிக்கிக்கொண்ட கர்நாடக சட்டசபை உறுப்பினர்கள் - மகாதேவ் பிரசாத், ஏ.ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அங்கிருந்து தப்பி ஒரு மருத்துவமனைக்குள் புகுந்து கொண்டனர்.

அரசியல் பிரமுகர்கள், பொலிஸாரோடு பத்திரிகையாளர்களையும் நாகப்பா உடலுக்கு அஞ்சலி செலுத்த அவரது ஆதரவாளர்கள் அனுமதிக்கவில்லை. மத்திய மந்திரிகள் ஆனந்தகுமார், ஸ்ரீநிவாச பிரசாத மற்றும் மாநில மந்திரிகள் பாச்சே கவுடா, நாகே கவுடா, சிந்தியா, எம்.பி.பிரகாஷ் ஆகியோரை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு வீட்டுக்குள் தள்ளிப் பூட்டினர். இதனால் அங்கு பெரும் பதற்றமும் குழப்பமும் நிலவியது.

நாகப்பா ஆதரவாளர்கள் தொடர்ந்து வன்முறை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நிலைமை கட்டுக்கடங்காது போனது. உடல் அருகே பொலிஸார் வரக்கூடாது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர். நிலைமையைச் சமாளிக்கப் பொலிஸார் மீண்டும் துப்பாக்கிச்சூட்டினை நடாத்தினர்.

அதன்பிறகே கூட்டத்தினர் கலைந்து சென்றனர். அனைத்துக் கட்சித் தலைவர்களும் பின்னர் அஞ்சலி செலுத்தினர்.

நாகப்பாவின் உடல் அவரது வீடு அருகே அடக்கம் செய்யப்பட்டது.

அப்போது 20 ஆயிரம் பொதுமக்களும் அனைத்துக்கட்சியினரும் கூடியிருந்தனர்.

முன்னதாக, நாகப்பா உடல் அடக்கத்தில் கலந்துகொள்வேன் என்று கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணா அறிவித்திருந்தார். ஆனால், மாநில உளவுப் பிரிவு கொடுத்த தகவலைத் தொடர்ந்து பாதுகாப்புக்கருதி அவர் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளவில்லை.

நேற்று கர்நாடகத்தில் கல்லூரிகள், பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெங்களூர் - மைசூர் இடையே ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டதாக தென்னிந்திய ரயில்வேத் திணைக்களம் அறிவித்தது.

இதேவேளை - நாகப்பாவின் மரணத்தைத் தொடர்ந்து கர்நாடக எல்லைப் பகுதிகளில் உள்ள தமிழ்க் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் அங்கு நிலவி வருகிறது. கர்நாடகத் தலைநகர் பெங்களூரில் தமிழர்கள் அதிகமாக வசிக்கும் பகுதிகளில் வன்முறைகள் நடத்தப்படலாம் என்ற அச்சத்தினால், அங்குள்ள தமிழர்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கின்றனர். பலர் தமிழ்நாட்டுக்கும் தப்பிச் சென்றுள்ளனர்.

உலகவலம்


IEECD அரசடி வீதி, கந்தர்மடம்
ஆங்கிலம்
கல்வியாண்டு – 2003
சிறுவர்களுக்கான
தரம் – 3, 4, 5 விசேட
வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
உடன் பதிவு செய்யவும்
ஆசிரியர்:
ஏஜழுடுநுவு.சுயுஆயுயேவர்யுளுயுபே
(சி-276)


## இன்றைய நாள் இனிய நாள்

**11-12-2002 - புதன்கிழமை**

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 25ஆம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச ஸப்தமி - மு.ப - 11.40 வரை அதன் மேல் அட்டமி.

*நட்சத்திரம்* :- சதயம் - பி.ப -1.42 வரை அதன் மேல் பூரட்டாதி.

*ராகுகாலம்* :- 12.19 - 1.49 *சுபநேரம்* :- 4.49 - 6.19

*நாளை* :- திருவெம்பாவை பூஜாரம்பம்

**மேடம்** :- தேகசுகம் நன்று, தெய்வ வழிபாடு, சமய அறிஞர் தரிசனம், பணவரவு, மனமகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- முயற்சி திருவினையாக்கும், புதிய தொழில் ஆரம்பித்தல், மக்கள் மத்தியில் மதிப்புப் பெறுதல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- பிதாவுடன் மகிழ்வு, தேகசுகம் நன்று, ஊக்கம், இனசன ஒற்றுமை, கல்வி ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- புதிய ஒப்பந்தங்கள் எழுதுதல் தவிர்க்கவும், நோயாளர் கவனமாக இருக்கவும், தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நன்று, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று, பண வரவு, பெண்கள் மகிழ்ச்சி, சுற்றுலாச் சிந்தனை, விதம் விதமான ஆடை அணிவதில் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- நோய் நீக்கம், பழைய கடன் வரவு, காரிய சித்தி, மனமகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- மக்கள் மகிழ்ச்சியடைதல், புகழ், மகிழ்ச்சி, தெய்வ வழிபாடு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- வீட்டில் பெண்கள் தேகசுகக்குறைவு, வைத்தியச் செலவு, கொடுக்கல் வாங்கல் பிரச்சினை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தேகசுகம் நன்று, எண்ணித் துணிக கருமம், பெண்கள் மகிழ்ச்சி, நவநாகரிக உடை அணிவதில் மகிழ்ச்சி, சுற்றுலா, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்

**மகரம்** :- வரவுக்கு மிஞ்சிய செலவு, மந்தரையைப் போன்ற பெண்களால் குடும்பங்களில் பிரச்சினை, மனச்சஞ்சலம், அயலில் மௌனம் சாதிக்கவும், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமநிலை.

**கும்பம்** :- வீட்டில் மனமகிழ்ச்சி, விருந்தினர் வரவு, உபசாரத்தினால் மகிழ்ச்சி, சுற்றுலா மகிழ்வு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- தேகசுகக்குறைவு, மித மிஞ்சிய உணவு, உடலில் அசாதாரண நிலை, மற்றவர்களை மதியாத குணம், மனச் சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.


புதிய இளையமதி கல்வி நிலையம்
கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு.
2003ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவு தரம் 01 முதல் 08 வரையும் 9ஆம், 10ஆம், 11ஆம் தரங்களுக்கு 12.12.2002 இல் ஆரம்பமாகவுள்ளது.
யாழ். மண்ணில் தலைசிறந்த ஆசிரியர் குழாம்,
கணிதம் - S.கருணாகரன்
தமிழ் - P.நகுலன் B.A. (HONS)
K.அகிலன் B.A. (HONS)
N.சியாமளா
சமூகக்கல்வி - M.ஈஸ்வரதாஸ் B.A. (HONS)
விஞ்ஞானம் - V.குருபரன்
ஆங்கிலம் - S.டானியல்
A.பாலேந்திரா B.A. (HONS)
வர்த்தகம் - S.நந்தன்
சமயம் - M.S.சுமணன்
N.சியாமளா
சுகாதாரம் - S.ஜெயராஜ்
சுற்றாடல் - S.கணேசமூர்த்தி
புலமைப்பரிசில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர்: S.துர்க்கா
அடிப்படையில் இருந்து ஆங்கிலம் எழுதப் பேச வாசிக்கக் கற்பிக்கப்படும்.
புதிய பிரிவுகள் ஆரம்பம்
12.12.2002
நேரம் – 3 - 4 p.m.
4 - 5 p.m.
ஆசிரியர் - Mr.S.ஈஸ்வரமூர்த்தி
- நிர்வாகி.



நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
நேருக்கு நேர்
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)
(சி-287)



ராஜா யாழ்ப்பாணம்.

ஆறாவது வெற்றி வாரமாக
10.30, 2.30
வில்லன்
7.30, 9.30
JEAN CLAUDE VANDAMME இன்
BLACK EAGLE
(சி-151)



4ஆவது பிறந்த நாள் வாழ்த்து
11.12.2002
செல்வி
ஜதுர்ஷனா ஜனார்த்தனன்
மறவன்புலோவைச் சேர்ந்த
ஜனார்த்தனன் – காந்திமதி
தம்பதிகளின் புதல்வி
ஜதுர்ஷனா (ஜனனி)
இன்று (11.12.2002) புதன்கிழமை தனது நான்காவது பிறந்தநாளை அன்புத் தங்கையுடன் கொண்டாடுகின்றார்.
ஜனனியை பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் துர்க்கை அம்மன் அருள்பெற்று பல்லாண்டுவாழ அனைவரும் வாழ்த்துகின்றனர்.
R.ஜனார்த்தனன்.
சித்தன்கேணி.




துரித தபால்/பொதிகள் சேவை
இலங்கையின் எப்பாகத்திற்கும் 24 மணி நேர இடைவெளியில்
குறைந்த கட்டணம், பாதுகாப்பு, நம்பகத்தன்மை
கையளிக்கப்பட்டதற்கான உத்தரவாதம்
மேலும் விபரங்கட்கு: SRI MURUGAN AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna
T.P 021- 2222670, Fax- 021-2223214,
E.mail del - smskr@eureka.lk
(சி-296)


## பதவி வெற்றிடங்கள்

"யாழ் மாவட்டத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை துரிதமாக மேற்கொள்வதற்காக சில கிராம சேவையாளர் வெற்றிடங்கள் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்படவுள்ளன. இதற்காக ஓய்வுபெற்ற கிராம அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பங்களைத் தயாரித்து 2002.12.20ஆம் திகதிக்கு முன்பதாக யாழ். செயலகத்திற்குப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்"

**செ.பத்மநாதன்,**
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

*புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளை மேற்கொள்வதற்காக கிராம சேவையாளர் வெற்றிடங்களை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்புதல்*

1. முழுப்பெயர் :-
2. பிறந்த திகதியும், தற்போதைய வயதும் :-
3. ஓய்வுபெற்ற திகதி, கிராம அலுவலர் பிரிவு, உ.அ.அ. பிரிவு :-
4. ஓய்வுபெற்ற காரணம் (வயது காரணமாகவா அல்லது 44/90 சுற்று நிருபத்திலா) :-
5. கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் :-
6. மீளக் கடமையாற்ற விரும்பும் இடம் :-

..............................
(கையொப்பம்)

*குறிப்பு:-* புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகள் அதிகமாக உள்ள வெற்றிடங்கள் மாத்திரம் நிரப்பப்படும். (சி-297)

# தீர்வு முயற்சிகள் தொடர்பாக ஆராய ஜஸ்வந்த் சின்ஹா - சந்திரிகா சந்திப்பு!

## கொழும்பு வருகிறார் இந்திய வெளியுறவு அமைச்சர்

(புதுடெல்கி)

இலங்கையின் தற்போதைய சமாதான முயற்சிகள் தொடர்பாகவும் - சமாதானப் பேச்சுக்களின் போக்குகள் குறித்து கலந்துரையாடவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா கொழும்பு வந்து ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா, எதிர்வரும் 20ம திகதி கொழும்புக்கு வரவுள்ளார்.

சார்க் உட்பட வங்காள விரிகுடாவிலுள்ள நாடுகள் இணைந்து நடாத்தும் கருத்தரங்கு ஒன்றுக்காக கொழும்பு வரும் இவர்- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

இருதரப்பு விடயங்களோடு - நோர்வே மத்தியஸ்தத்துடனான பேச்சுக்களின் முன்னேற்றங்கள் பற்றியும் இவர்களது பேச்சுக்கள் அமையுமென புதுடெல்கியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜஸ்வந்த் சின்ஹா - தனது பதவிக்காலத்தில் இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள இரண்டாவது விஜயம் இதுவாகும்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபால் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின் பின்னர், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹாவின் பயணம் இடபெறவுள்ளது. இந்த விஜயத்தின் போது வேறு முக்கிய விடயங்களும் ஆராயப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரிகேடியர் மனைவியின் பாதுகாப்புக்கு சென்ற கொமாண்டோக்கள் விபத்தில்!

## பூரண விசாரணைக்கு ஒஸ்ரின் பெர்ணான்டோ உத்தரவு

(கொழும்பு)

இராணுவ வாகனங்களை படையதிகாரிகள் தமது தனிப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்துவது தொடர்பாக பூரண விசாரணையொன்றை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ உத்தரவிட்டுள்ளார்.

மின்னேரியாவில் உள்ள 23ஆவது டிவிசனின் பிரதிக் கட்டளை அதிகாரியின் மனைவி மற்றும் குடும்பத்தினருக்குப் பாதுகாப்பாக சென்ற வாகனம் விபத்துக்குள்ளான சம்பவத்தையடுத்தே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

விடுமுறையைக் கழிக்க பிரிகேடியர் லாலந்த சந்திரவன்சவின் மனைவி, மற்றும் குடும்பத்தினர் மட்டக்களப்புக்கு சென்று விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோது, இவர்களுக்குப் பாதுகாப்பாக வந்த 'டிபென்டர்' வாகனம் மன்னம்பிட்டியில் விபத்துக்குள்ளானது.

இதில் வாகனம் பலத்த சேதமடைந்ததுடன் - அதில் இருந்த 9 கொமாண்டோக்களில் மூவர் படுகாயமடைந்தனர். 20 லட்சம் ரூபா பெறுமதியான வாகனமும் சேதமடைந்தது. இதையடுத்தே இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சமாதான காலத்தில் இராணுவ அதிகாரி ஒருவரின் குடும்பத்துக்கு 9 கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்பட்டது குறித்தும் விசாரணைகளை நடாத்துமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ உத்தரவிட்டுள்ளார்.

# நுகேகொடையில் வாகனம் திருடி கண்டியில் விற்ற மாணவர்கள் !

கண்டிப் பாடசாலையிலும், கொழும்புப் பாடசாலைகளிலும் கல்வி கற்றுவந்த உயர்தர மாணவர்கள் மூவர் கொழும்பில் வாகனம் ஒன்றைத் திருடி, கண்டியில் விற்க முயற்சித்தபோது பொலிசாரிடம் அகப்பட்டுக் கொண்டனர்.

இந்த மூன்று மாணவர்களும், ராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், திருடிய வாகனத்துக்கு புதிய இலக்கத்தகடு பொறிக்கப்பட்டிருந்தது என்றும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

இந்த வாகனம் உல்லாச விடுதி ஒன்றுக்குச் சொந்தமானதாகும். நுகேகொட சந்தியில் வாகனம் நின்றபோதே, இத்திருட்டு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# 4ஆவது சுற்றுப் பேச்சுக்கள் அடுத்தமாதம் தாய்லாந்தில்!

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடைபெறும் அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் தாய்லாந்தில் நகோன்பதொமில் அடுத்த மாதம் 6ம் திகதி தொடக்கம் 9ம் திகதிவரை நடைபெறும்.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது மனித உரிமைகளுக்கு விசேட கவனம் செலுத்தப்படும் என்றும், ஜப்பான்- ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்துக்கு, மேற்படி பேச்சுக்களின்போது ஆராயப்படும் விடயங்கள், உதவியாக அமையும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# வட - கிழக்கு நிதியைக் கையாள மூன்று சர்வதேச நிறுவனங்கள்

(கொழும்பு)

இலங்கையின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்காக சர்வதேச நாடுகள் வழங்கியுள்ள நிதியைக் கையாள, மூன்று சர்வதேச நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகியவற்றுக்கு இந்த அழைப்பு விடப்பட்டிருக்கின்றது.

அழைப்புக்கு இந்த நிறுவனங்களிடம் இருந்து இந்தவாரம் பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.



நெடுந்தீவில் ஈ.பி.டி.பி. யினருக்கு எதிராக நடைபெறும் மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேரணியில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரைப் படத்தில் காணலாம். (படம் - கனகரவி)

## ஈ.பி.டி.பிக்கு எதிரான போராட்டம்!

# பின்னணியில் புலிகள் இருப்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை

(கொழும்பு)

ஈ.பி.டி.பியினருக்கு எதிராகப் பரவலாக நடத்தப்பட்டு வரும் போராட்டங்களுக்கு புலிகள் பின்னணியில் இருப்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹோக்லன்ட் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியினருக்கு எதிராக நடத்தப்படும் போராட்டங்களுக்குப் பின்னணியில் புலிகள் இருக்கின்றார்களா என்பது குறித்து உடனடி முடிவுக்கு வருவது சரியானதல்ல.

எல்லா அரசியல் கட்சிகளும் அரசியலில் ஈடுபட அனுமதிக்கப்படும். புலிகள் தமது அனைத்து மட்டக் கூட்டங்களிலும் - தாம் ஈ.பி.டி.பியினருக்கு எதிரான போராட்டங்களின் பின்னணியில் இருக்கவில்லை என்று கூறிவருகின்றனர் என்றும் ஹோக்லன்ட் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஜனவரி முதல் மருதங்கேணியில் வைத்தியசாலை

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை ஜனவரி மாதம் தொடக்கம் தனியார் வீடொன்றில் இயங்கவுள்ளது. இதனால் இவ்வைத்தியசாலைக்கு வைத்தியர் மற்றும் ஊழியர்களைத் தந்துதவுமாறு சுகாதாரத் திணைக்களத்திடம் கேட்கப்பட்டுள்ளது. (71)

# வட - கிழக்கு சுகாதார சேவை நிலவரம் மதிப்பீடுகளைச் செய்ய குழு நியமனம்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் சுகாதார சேவைகள் நிலைமை குறித்து ஆராய்வதற்கு சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் றெஜி பெரேரா, மேலதிகச் செயலாளர் டாக்டர் நிஹால் ஜயதிலக, சுகாதார பணிப்பாளர் நாயகம் அத்துல லியனகே ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

வடக்கு - கிழக்கில் சுகாதார சேவைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் வெளிநாடுகளில் இருந்து பெறப்படும் நிதியை எவ்வாறு கையாளலாம் என்பதை இந்தக் குழு அவ்வப்போது பிரிசீலிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்பு வடக்கு-கிழக்கில் சுகாதார சேவைகள் சம்பந்தமாக மேற்கொண்டு வந்த நடவடிக் கைகளுக்கு பொறுப்பாக இருந்த டாக்டர் வெலிகஸ்வத்த அப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என அறிய வருகிறது.

# மீண்டும் புலிகளுக்கு எதிராக யுத்தம்! ஆரம்பிக்க வேண்டும் என்கிறது ஜே.வி.பி.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு யுத்தம் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்.

- இவ்வாறு ஜனதா விமுக்தி பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்திருக்கிறார். பாதுகாப்பு அமைச்சிற்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமஷ்டி ஆட்சி மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கும் முயற்சிகளை எங்கள் கட்சி எதிர்க்கிறது. விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கு தற்போதைய அரசாங்கம் கவிழ்க்கப்பட வேண்டும். விடுதலைப்புலிகளுக்கு எதிரான யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டும். இதன் மூலமே நாட்டைக் காப்பாற்ற முடியும் என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### கொற்றாவத்தையில் கல்யாண மண்டபம்

(வடமராட்சி கிழக்கு)

கொற்றாவத்தை செட்டித்தறை சித்திவிநாயகர் ஆலயச் சூழலில் 50 லட்சம் ரூபா செலவில் கல்யாண மண்டபம் அமைக்கப்பட்டுவருகிறது.

இந்துக் கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் இக் கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார். இக் கல்யாண மண்டபம் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் முற்பகுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது. (17)

### கட்டாக்காலி நாய்கள் குறித்து முறைப்பாடு

(நெல்லியடி)

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக, பொது மக்கள் மாநகரசபையிடம் முறையிட்டுள்ளனர்.

நல்லூர் கந்தசாமி கோவில் வீதி, செட்டித்தெருவீதி, நாவலர் வீதி, அரசடி வீதி, பருத்தித்துறை வீதி ஆகிய இடங்களில் இக்கட்டாக்காலி நாய்கள் அதிகரித்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

மாநகரசபை அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (13)

### 10 வருடங்களாக நிரந்தரமாக்கப்படாத தொழிலாளர்கள்

(வடமராட்சி கிழக்கு)

கைதடி வயோதிபர் இல்லத்தில் பணிபுரியும் சுமார் 21 தொழிலாளர்கள் கடந்த 10 வருடங்களாக சேவையில் நிரந்தரமாக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுத்திகரிப்பாளர், சமையற்காரர், காவலாளிகள் மற்றும் அலுவலகப் பணியாளர்களாக பணியாற்றுபவர்களுக்கே நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (17)

### புற நிலைப் படிப்புக்கள் அலகில் புதிய கற்கை நெறிகள்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகில் புதிய கற்கை நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

மனித உரிமைகள், இதழியல், அலுவலக முகாமைத்துவம் ஆகிய புதிய கற்கை நெறிகள் ஜனவரி மாத முற்பகுதியில் ஆரம்பமாகுமென அதன் இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

ஆர்வமுடையவர் அனைவரும் பதிவுகளை முன் கூட்டியே செய்து அனுமதிகளை உறுதிப்படுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (30)

### ஆரம்ப சுகாதார மேடை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன், மாநகர சபையின் சுகாதாரக் கல்விப்பிரிவினால் நடாததப்படும் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு பற்றிய மேடை நிகழ்வு எதிர் வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

### திரிபோஷா பொதிகள் வந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் வழங்குவதற்காக ஆயிரதது இருநூறு திரிபோஷா பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இவை சுகாதாரப் பிரிவுகளிலுளள தாய் சேய் சிகிச்சை நிலயங்களூடாக வழங்கப்படவுள்ளன. (ச)

### தெல்லிப்பளை வைத்தியசாலையில் இடநெருக்கடி

(பன்னாலை)

யாழ்.மாவட்டத்தில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருவதால் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலைக்கு நாளாந்தம் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சைக்கு வருகின்றனர். இவர்களில் பலர் காய்ச்சல் காரணமாக வோட்டில் தங்கி நிற்கும்போது, கட்டில் இல்லாமையால் நிலத்தில் புடுத்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

# யாழ். வைத்தியசாலைக்கு வசதிகள் பிரதமர் ரணில் விசேட பணிப்புரை!

## 45 தாதிமாரை நியமிக்கவும் உத்தரவு

(கொழும்பு நிருபர்)

யாழ்.போதனா வைத்தியசாலையை முழுமையான வசதிகள் கொண்ட வைத்தியசாலையாக மாற்றியமைக்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பாக அமைச்சர் மகேஸ்வரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். இதையடுத்தே, பிரதமர் ரணில் இவ் உத்தரவை வழங்கியுள்ளார்.

அத்துடன், உடனடியாக இவ் வைத்தியசாலைக்கு 45 தாதிமார்களை நியமிக்குமாறும், சிறுவர் வைத்திய நிபுணர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கும்படியும், நவீன வசதிகள் கொண்ட அவசர விபதது்ச் சிகிச்சைப் பிரிவை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

# 13 சேவைக்கால ஆலோசகர்கள் வலிகாமம் வலயத்தில் நியமனம்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் சேவைக்கால ஆலோசகர்கள் பாட ரீதியாகவும், மொழி ரீதியாகவும் நியமிக்கப்படவுள்ளனர்.

வலிகாம வலயத்தில் வெற்றிடமாகவுள்ள 13 பாடங்களுக்கு ஆசிரிய ஆலோசகர்களை நியமிக்க மாகாணக் கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விண்ணப்பதாரிகள் - எழுத்து, நேர்முகப் பரீட்சைகள் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர் எனவும் - மேலதிக விபரங்களை கல்வி வலயத்தில் பார்வையிட்டு, 20 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர் குழு தென்பகுதியிலிருந்து வருகை

(மீசாலை)

தென்பகுதியிலிருந்து நல்லெண்ண விஜயத்திற்காக 40 பேர் அடங்கிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் குழுவொன்று யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளது.

இவர்கள் யாழ்.மாவட்டத்திலுளள சமுர்த்தி உத்தியோகத்தர் காரியாலயங்களுக்கு சென்று வருகின்றனர். இக்குழுவில் சமுர்த்தி உயர் அதிகாரிகளும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்கள் யாழ். மாவட்டத்தின் அனைத்து பகுதிகளுக்கும் செல்லவுள்ளனர். கடநத திங்களன்று தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு விஜயம் செய்த இவர்கள், அங்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களுடன் பரஸ்பரம் உரையாடிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(25)

# ஆசிரியர் தரங்கணிப்புப் படிவங்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கான தரங்கணிப்புப் படிவங்கள், தரங்கணிப்புக்கான அறிவுறுத்தல்களைக் கொண்ட கையேடு மற்றும், பாடசாலை ஆசிரிய ஆளணியைக் கணிக்கும் கல்வி அமைச்சின் சுற்றறிக்கை ஆகியன இன்று புதன்கிழமை வலயக் கல்வி அலுவலகத் திட்டமிடற பிரிவில் வைத்து விநியோகிக்கப்படவுள்ளன.

இவற்றைப் பாடசாலை அதிபர்கள் அல்லது அதிபர்களினால் சிபார்சு செய்யப்பட்ட ஆசிரியர்கள் வந்து பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். வலயக கல்விட் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# நாளொன்றின் பிறப்பைவிட கருக்கலைப்பு அதிகம்!

## சுகாதாரக் கருத்தரங்கில் தகவல்

இலங்கையில் நாளொன்றுக்கு இடம்பெறும் பிறப்புக்களை விட கருக்கலைப்பு அதிகமாகவுள்ளதாக வெலிகேபொல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் மெனிகே ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

யுனிசெவ் ஆதரவுடன் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

பெண்கள் அதிகமாக கருக்கலைப்புக்களில் ஈடுபடுவதால் அவர்களின் உடல்நலத்துக்கு மட்டுமன்றி நாட்டின் எதிர்காலத்துக்கும் பாதிப்பு ஏற்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரணியில் புதிய காவலரண்கள்

(வரணி)

வரணி நகரை அண்டிய பகுதிகளில் தற்போது வீதிகள் தோறும் புதிதாகக் காவலரண்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

(27)

# பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தராக சிதம்பரப்பிள்ளை

(மீசாலை)

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய செ.முருகையா ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையை அடுத்து,

அவ்விடத்திற்கு கைதடி வயோதிபர் இல்லத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய எஸ்.சிதம்பரப்பிள்ளை நேற்றுமுன்தினம் முதல் நியமிக்கப் பட்டுள்ளார்.

(25)

# நீதிமன்றத் தண்டப்பணம் பிரதேச சபைகளுக்குப் பகிர்வு

யாழ். நீதிவான் நீதிமன்றத்தினால் அறவிடப்பட்ட தண்டப்பணம், அரச நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக பிரதேச சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. வலி. மேற்கு பிரதேச சபைக்கு 350 ரூபாவும், வலி. வடக்கு பிரதேச சபைக்கு 450 ரூபாவும், வலி.தெற்கு பிரதேச சபைக்கு 6,250 ரூபாவும், நல்லூர் பிரதேச சபைக்கு 55,475 ரூபாவும், வலி. தென்மேற்கு பிரதேச சபைக்கு 18,450 ரூபாவும், வலி. கிழக்கு பரதேச சபைக்கு 1 லட்சத்து இரணடாயிரத்து 100 ரூபாவும், யாழ். மாநகரசபைக்கு 2 லட்சத்து 21 ஆயிரத்து 950 ரூபாவும் வழங்கப்பட்டது.

# செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இம்மாதம் 16 ஆம் திகதி நடைபெறவிருந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான செயலமர்வு தவிர்க்க முடியாத காரணத்தால் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

## தெல்லிப்பளை

# புற்றுநோய் வைத்தியசாலை நேற்றுத் திறந்து வைப்பு!

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கும் தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை நேற்றுக்காலை 10 மணியளவில் வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி ப.திலகநாயகம் போல் வைபவரீதியாகத் திறந்து வைத்தார்.

தெல்லிப்பபளை சுகாதார வைத்திய அதிகாரி நவமலர் கனகரட்ணம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உமா சிவபாதசுந்தரம், தாய், சேய்நலன் வைத்திய அதிகாரி, வைத்திய நிபுணர்கள் சிவசுப்பிரமணியம், ஞானேஸ்வரன், வலி.வடக்குப் பிரதேசசபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் மற்றும் 515 ஆவது பிரிகேட் இராணுவத் தளபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# குருநகரில் காணாமற்போனவர்கள் புளியங்குளத்தில் மீட்கப்பட்டனர்!

(கிளிநொச்சி)

குருநகரில் மர்மமான முறையில் காணாமல்போன, மூன்று பாடசாலை மாணவிகள் புளியங்குளத்தில் மீட்கப் பட்டுள்ளனர்.

ஓட்டோ ஒன்றில் ஏற்றப்பட்டு வலுக்கட்டாயமாக வவுனியாப் பகுதியை நோக்கி அழைத்துச் செல்லப்பட்ட சமயமே, இம்மூன்று மாணவிகளையும் பொதுமக்கள் சிலர் மீட்டெடுத்தனர். மீட்கப்பட்ட மேற்படி மூவரும் தற்போது வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் பாதுகாப்பில் உள்ளனர்.

கடந்த முப்பதாம் திகதி குருநகரில் காணாமல் போன இம்மூவர் தொடர்பாகவும், யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செயயபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஆன்மீகச் சொற்பொழிவு

ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடர்-18, நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள, நாவலர் மணிமண்டபத்தில் - வெள்ளிக்கிழமை பி.ப. 5.30 இற்கு சிவ.மகாலிங்கம் தலைமையில நடைபெறவுள்ளது.

இதில் "திருவாசகத் தேன்" எனும் விடயம் தொடர்பாக சைவப்புலவர் ஏ.அனுஷாந்தன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு நாடாளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு நிருபர்)

பாதுகாப்பு அமைச்சுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீடு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இருபத்துமூன்று மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேற்படி நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 85 வாக்குகளும் கிடைத்துள்ளன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) ஆகியவை பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தன. தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.


## வாழ்க வளமுடன்

### நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்

7ஆம் திகதி பிறந்த நாளைக் கொண்டாடிய

HAPPY BIRTHDAY



பெயர் :கே.மகாலஷ்மி
முகவரி:குஞ்சியப்பு கடை வீதி, மிருசுவில் வடக்கு.

மூன்றாவது அகவையில்



பெயர் : க.ஜிவீர்த்தனா
முகவரி: சுன்னாகம் மேற்கு, சுன்னாகம்.

நான்காவது அகவையில்



பெயர் : ஜ.ஜதுர்ஷனா
முகவரி: வட்டு.கிழக்கு, சித்தங்கேணி.

ஏழாவது அகவையில்



பெயர் : இ.கௌசிகன்
முகவரி: தையிட்டி, காங்கேசன்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி:------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


# ஹக்கீமுடன் இணைய 8 நிபந்தனைகள் அதாவுல்லா அணி சார்பில் முன்வைப்பு

(கொழும்பு


முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் மீண்டும் தாம் இணைய வேண்டுமானால், ஹக்கீம் எட்டுக் கோரிக்கைகளுக்கு இணங்க வேண்டும் என அதாவுல்லா தலைமையிலுள்ள குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் குழுவினரில் ஒருவரான வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான நூர்தீன் மசூர் அண்மையில் புத்தளத்தில் ஹக்கீமைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே, அதாவுல்லா குழுவினர் தரப்பில் இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

கட்சிக்குப் புதிய யாப்பு ஒன்றை உருவாக்கித் கட்சித் தலைவருக்குப் பதிலாக 5 உறுப்பினர் குழுவிற்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிப்பது பிரதான கோரிக்கையாகும். இந்தக் குழுவினரின் பணிப்பின்பேரிலேயே கட்சித் தலைவர் இயங்க வேண்டும், கட்சியின் அரசியல் பீடத்தையும், உயர்பீடத்தையும் புதிதாக ஏற்படுத்த வேண்டும், புதிதாக அமைக்கப்படும் உயர்பீடமே மு.கா. சார்பிலான அமைச்சர்களின் நியமனங்களைத் தீர்மானிக்கும். இடம்பெற வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. எனினும், இந்தப் பேச்சுக்கள் சாதகமாக அமையவில்லை எனத் தெரியவருகின்றது.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## தோற்றும் மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்



மாணவர் மலர்

**வினாத்தாள் - I - அறிமுகம்**

*1995ஆம் ஆண்டு முதல் நடைமுறையிலுள்ள புதிய பரீட்சைமுறை இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது.*

*முதலாம் வினாப்பத்திரம் (நேரம் - 45 நிமிடங்கள்- 100 புள்ளிகள்)*

இவ்வினாப்பத்திரத்தின் மூலம் மாணவரது கற்கும் ஆற்றல்கள், உள்ளார்ந்த திறமைகள் மதிப்பிடப்படுகின்றன. இதற்குப் பொருத்தமான இனங்காணப்பட்ட கற்றல் ஆற்றல்கள், உள்ளார்ந்த திறமைகள், எளிய வரைவிலக்கணங்கள் கீழே தரப்படுகின்றன.

1. பிரதியீடு SUBSTITUTION
   ஒரு பொருள், குறியீடு, நிலைமை, செயற்பாடு என்பவற்றிற்கு பதிலாக வேறொரு பொருளை, அடையாளத்தை, நிலைமையை, செயற்பாட்டினை இனங்காணல்/தெரிதல்

2. வரைவிலக்கணம் INTERPRETION
   ஒருதரவை அல்லது நிகழ்வை, சந்தர்ப்பத்தை அல்லது நடவடிக்கையை வரைவிலக்கணப்படுத்தல்/விளக்குதல்

3. எதிர்வுகூறல் PREDICTION
   தரப்பட்டுள்ள தரவுகள், தகவல்களை மையமாகக் கொண்டு எதிர்காலத்தில் நிகழக்கூடிய ஒரு நிலைமை பற்றி எதிர்வுகூறல்

4. மொழிபெயர்ப்பு TRANSLATION
   ஒரு சொல்லின், கூற்றின், படத்தின், வரைபின் கருத்தை வேறுமாதிரியாக மாற்றியமைத்தல் மொழிபெயர்த்தல் ஆகும்.

5. பிரசினங்களைத் தீர்த்தல் PROBLEM SOLVING
   தான் பெற்ற அறிவை அல்லது அனுபவத்தை வேறொரு சந்தர்ப்பத்தில் அல்லது சவாலை எதிர்நோக்கும்போது உபயோகித்தல்

6. தொடர்புகளைக் காணல்
   SEEING RELATIONSHIPS
   ஒரு ஆளை, பொருளை, கூற்றை அல்லது சந்தர்ப்பத்தை அது போன்ற வேறொரு ஆளுடன், பொருளுடன், கூற்றுடன், சந்தர்ப்பத்துடன் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை இனங்காணல்.

7. காரண காரியங்களை இனங்காணல்
   IDENTIFICATION OF CAUSE AND EFFECT
   ஒரு காரியத்துக்குரிய காரணத்தை இனங்காணல்

8. தகவல்களின் ஒருங்கமைப்பு
   ORGANISATION OF INFORMATION
   ஒரு தகவற்தொகுதியை ஓர் ஒருங்கமைப்பின் கீழ் அல்லது கருத்து வெளிப்படுத்தும் விதத்தில் ஆக்குதல்.

9. கோலங்களின் புலக்காட்சி PERCEPTION
   ஒரு படத்தின், உருவின் அல்லது தகவலின் கோலத்தை கருத்துடன் நோக்குதல்.

10. அவதானிப்பு OBSERVATION
    படம், எழுத்து, இலக்கம், குறியீடு, வரைபு, உரு என்பவற்றின் குறைகள், சிறப்பியல்புகளை அவதானித்தல்

11. இடைத்தொடர்புகள் INTER RELATIONS
    ஒரு தகவல் அல்லது தகவற்றொகுதி ஒரு பொதுமையின் அல்லது வகையின் ஒருபகுதி என்பதை இனங்காணல்.

12. தர்க்கித்தல் REASONING
    தரவுகளை மையமாகக் கொண்டு முடிவுக்கு வருதல்.

13. வெளித்தொடர்புகளை இனங்காணல்
    SEEING - SPATIAL RELATIONSHIPS
    உளக்கோலங்கள், மனக்கண்முன் தோன்றும் உருவகங்கள் மூலம் தரப்படும் தகவற்தொகுதியின் துல்லியமான தொடர்புகளைக் கண்டுபிடித்தல்

14. அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்
    FOLLOWING INSTRUCTIONS
    ஒரு அறிவுறுத்தலை வாசித்து விளங்கி அதன்படி செயலாற்றும் ஆற்றல்

**வினாத்தாள் - II - அறிமுகம்**

*இரண்டாம் வினாப்பத்திரம் - (நேரம் 1மணி 15 நிமிடங்கள் - 100 புள்ளிகள்)*

தரம் ஒன்றிலிருந்து தரம் 5 வரை மாணவருக்குக் கற்பிக்கின்ற அல்லது கற்பிக்கப்படுகின்ற எல்லாப் பாடங்களினூடாகவும் - மாணவர் பெற்றுள்ள அறிவு, திறன், மனப்பாங்குகள் கணிப்பிடப்படும். இவ்வினாப்பத்திரத்தின் குறிக்கோள்கள் கீழே தரப்படுகின்றன.

1. தரம் ஒன்று முதல் 5 வரையில் வகுப்பறையில் கற்பிக்கும் சகல பாடப் பரப்புக்களில் அடங்கியுள்ள விடயங்களின் துணையுடன் மாணவர் திரட்டியுள்ள திறன்களை நுணுகி ஆராய்தல்.

2. பாடநூல்களைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் பெறும் பாட அனுபவங்களை ஆராய்தல்

3. ஆசிரியர் கைந்நூல், ஏனைய கற்றற் கற்பித்தற் சாதனங்களின் துணையுடன் ஆசிரியர் வழங்கும் அனுபவங்கள் ஆகியன காரணமாக-மாணவரிடையே விருத்தியடைந்துள்ள அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை மாணவரின் வயது மட்டத்தின் அடிப்படையில் ஆராய்தல்.

4. மாணவர் பல்வேறு பாடங்களினூடாக வகுப்பறையிற் கற்கும் கோட்பாடுகள் பற்றிப்பெற்ற அறிவினை நாளாந்தம் ஏற்படுகின்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுத்தக்கூடிய ஆற்றலை மதிப்பீடுசெய்தல்.

**வி.என்.எஸ்.உதயச்சந்திரன்**
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.
(ஆசிரியர். கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி)

5. தமது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வகுப்பறையிற் கற்கும் கோட்பாடுகளை பயன்படுத்தும் ஆற்றலைக் கணிப்பீடுசெய்தல்.

6. வகுப்பறையில் மாணவர்கள் ஈடுபடும் ஒப்படைகள், செயற்திட்டங்கள் போன்ற குழு நடவடிக்கைகள், தனிப்பட்ட செயற்பாடுகள் ஆகியவற்றின் துணையுடன் அவர்கள் பெறும் கற்றல் அனுபவங்களை ஆராய்தல்.

7. பாடத்திட்டத்தோடு இணைந்த பல்வேறு தொழிற்பாடுகளும், அனுபவங்களும் காரணமாக மாணவரிடையே ஏற்படும் ஆக்கற்திறனை கணிப்பீடுசெய்தல்.

*மேற்படி இரு வினாப்பத்திரங்களினதும் நோக்கங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படும்.*

☞ புதிய கல்விச் சீர்திருத்த அறிமுகத்திற்குப் பின்னரும் இதே. அமைப்பிலேயே வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சை - (கம்பஹா மாவட்டத்தில் புதிய சீர்திருத்தத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கும் தேசிய ரீதியாக பழைய பாடத்திட்டத்திற்கு உட்பட்ட மாணவர்களுக்கும்) எவ்வித மாற்றங்களிற்கும் உட்படவில்லை என்பதை நினைவிற்கொள்க.

***உங்கள் கவனத்திற்கு***

- வினாக்கள் தயாரிக்கப்படும் முறையை அறிந்து கொண்டால் வழிகாட்டும் பெற்றோர்களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் எந்த விதமான சிரமமும் ஏற்பட வாய்ப்பில்லை.
- வினாப்பத்திர அமைப்பு முறையை தழுவாத நூல்களையும், வினாத்தாள்களையும் பயன்படுத்தும் போது - மாணவர்களின் கற்றல் போக்கு திசை மாறிச் செல்ல வாய்ப்புக்கள் அதிகமாகும். இதனால் மாணவர்கள் கல்வி மீது நாட்டங்காட்டாத நிலை ஏற்படுவதாக ஆய்வுகள் நிரூபிக்கின்றன.
- பாடத்திற்கேற்ப கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்குச் சுமையாக அமையாது. கைந்நூல்களை - கற்பிப்பதற்கு ஆதாரமாகக் கொள்ள வேண்டும் என்பதை கற்பிப்பவர்களும், வழிகாட்டுபவர்களும் நினைவிற் கொள்ளல் வேண்டும்.


## உதாரணப் பயிற்சிகள்

**வினாப்பத்திரம் I**

✹ **அவதானிப்பு** OBSERVATION


❖ கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடன் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. அதனைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

1. 2. 3. 4.



✹ **இடைத் தொடர்புகள்** INTER RELATIONS

❖ கீழே தரப்பட்டுள்ள உருவை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.




1. வட்டத்திற்கே மட்டும் உரிய இலக்கம் எது? (..........)
2. வட்டத்திற்கும் சதுரத்திற்கும் மட்டும் உரிய இலக்கங்கள் யாவை? (..........)
3. சதுரம்,முக்கோணி, வட்டம் ஆகிய மூன்றுக்கும் பொதுவான இலக்கம் அல்லது இலக்கங்கள் எது/ எவை? (..........)

*(அடுத்த வாரம் தொடரும்)*

**அன்பார்ந்த ஆசிரியர்களே, பெற்றோர்களே!**

**5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கான தெளிவான வழிகாட்டல் குறிப்புகள் இங்கு அறிமுகமாகின்றன. இதனைத் தொடர்ந்து பயிற்சிகளும் வினாக்களும் வழங்கப்படும். எனவே இப்பகுதியை தொடர்ச்சியாக சேகரிப்பதன் மூலம் உயர்ந்த விளைவை மாணவர்கள் பெறமுடியும்.**

*- பொறுப்பாசிரியர்.*



# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை (மாதிரி வினாத்தாள்)

## பொருளியல்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

**வினா:**

இ) நிறை போட்டிச்சந்தையின் சிறப்பியல்புகள் யாவை?

**விடை:**

- ஏராளமான உற்பத்தியாளர்களும் நுகர்வோர்களும் காணப்படுவர்.
- ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். அதாவது பூரணமான பிரதியீட்டுத் தன்மை வாய்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யப்படும்.
- உற்பத்திச் சாதனங்களின் அசைவிற்குத் தடைகள் காணப்படமாட்டாது.
- நுகர்வோர்கள் சந்தை பற்றிய பூரண அறிவைக் கொண்டிருப்பர்.
- பிரவேச சுதந்திரம் காணப்படும். அதாவது நிறுவனங்கள் தாம் விரும்பியவாறு சந்தையில உட்பிரவேசிப்பதற்கும் வெளியேறுவதற்கும் உரிமையுடையவர்களாக இருப்பர்.
- அரசின் தலையீடுகள், கட்டுப்பாடுகள் காணப்படமாட்டாது.

### பகுதி "ஆ"

**வினா:**

5. அ) மொத்தத்தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத்துறையினரின் வருமானம் எவ்வாறு பெறப்படுகின்றது?

**விடை:**

மொத்தத்தேசிய வருமானத்தோடு வீட்டுத்துறையினர் பெறுகின்ற மாற்றல் வருமானங்களைக் கூட்டி - பெறுமானத்தேய்வு, பகிரப்படாத லாபங்கள், வரியில்லாத அரசிறை போன்றவற்றைக் கழிப்பதன் மூலம் வீட்டுத்துறையினரின் வருமானம் பெறப்படுகின்றது.

**வினா:**

ஆ) தேசிய வருமானக் கணிப்பீட்டில் இருந்து எத்தகைய கொடுப்பனவுகள் விலக்கப்படுகின்றன, ஏன்?

**விடை:**

- இடைக் கொடுப்பனவுகள்- மூலப்பொருட்கள், இடைத்தரப்பொருட்கள் மீதான கொடுப்பனவுகள் இவற்றைச் சேர்ப்பதன் மூலம் இரட்டை எண்ணப்பிரச்சினை தோன்றும்.
- மாற்றல் கொடுப்பனவு- இவை ஒரு பக்கக் கொடுப்பனவு ஆதலால், தேசிய வருமானக் கணிப்பீட்டிற்குள் சேர்க்கப்படுவதில்லை.

**வினா:**

இ) தேசிய வருமானக் கணிப்பீட்டு முறைகளில் காணப்படும் குறைபாடுகள் யாவை?

**விடை:**

- பிழைப்பு மட்ட உற்பத்தி சட்டவிரோத உற்பத்தி என்பன சேர்க்கப்பட்டாமை.
- இரட்டை எண்ணல் ஏற்படல்
- உற்பத்தியின் அளவில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டும். தரத்தைக் காட்டமாட்டாது.
- சூழல் மாசடைதல் போன்ற எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் கவனத்தில் எடுக்கப்படாமை.
- பாதுகாப்புச் செலவுகள் தேசிய உற்பத்திக் கணிப்பீட்டிற்குள் சேர்க்கப்படுதல்.

**வினா:**

6. அ) எல்லை நுகர்வு நாட்டம், சராசரி நுகர்வு நாட்டம் என்பவற்றை வேறுபடுத்துக.

**விடை:**

**எல்லை நுகர்வு நாட்டம்**

வருமான மாற்றத்தில் எத்தனை பங்கு நுகர்விற்குச் செலவிடப்படுகின்றது என்பதை அளவிட்டுக் கூறுகின்றது. வருமானம் ஒரு ரூபாவால் அதிகரிக்கும்போது நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும் என்பதனைக் குறிக்கின்றது.

$$\text{எல்லை நுகர்வு நாட்டம்} = \frac{\text{நுகர்வு மாற்றம்}}{\text{வருமான மாற்றம்}} \quad MPC = \Delta C/\Delta Y$$

**சராசரி நுகர்வு நாட்டம்**

வருமானத்தில் எத்தனை பங்கு நுகர்விற்குச் செலவிடப்படுகின்றது என்பதை அளவிட்டுக் கூறுகின்றது. நுகர்வை வருமானத்தால் பிரிப்பதன் மூலம் இது கணிப்பிடப்படுகின்றது.

$$\text{சராசரி நுகர்வு நாட்டம்} = \frac{\text{நுகர்வு}}{\text{வருமானம்}} \quad APC = C/Y$$

**வினா:**

ஆ) வெளிநாட்டுத்துறையுள்ள அரசாங்கத்துறையில்லாத ஒரு பொருளாதாரத்தில், பெருக்கி எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?

**விடை:**

எல்லை சேமிப்பு நாட்டத்தினதும் எல்லை இறக்குமதி நாட்டத்தினதும் கூட்டுத்தொகையின் தலைகீழ்ப்படுத்தப்பட்ட பெறுமதியாக, பெருக்கி அமையும்.

$$\frac{1}{MPS + MPM}$$

**வினா:**

இ) திறந்த பொருளாதாரம் ஒன்றின் வருமான வட்டப்பாய்ச்சலில் சமநிலை எவ்வாறு ஏற்பட முடியும்?

**விடை:**

மொத்த வருமானம் (Y), மொத்தக்கேள்விக்கு - மொத்தச் செலவிற்கு (E) சமமாகும்போது சமநிலை ஏற்படும்.

$$Y=C+I+G+(X-M)$$

பொருளாதாரத்தின் உட்பாய்ச்சல்களான முதலீடு (I), அரசாங்கச் செலவு (G), ஏற்றுமதிகள் (X) என்பனவற்றின் கூட்டுத்தொகை - வெளிப்பாய்ச்சல்களான சேமிப்பு (S), வரிகள் (T), இறக்குமதிகள் (M) என்பவற்றின் கூட்டுத்தொகைக்கு சமமாதல்.

$$I+G+X=S+T+M$$

**வினா:**

7. அ) பேரினப் பொருளாதார உறுதிநிலை என்பதால் கருதப்படுவது யாது? இதனை அடைவதற்கு அரசாங்கம் வரவு செலவுத்திட்டத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?

**விடை:**

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி பொதுவிலைமட்டத்தை உறுதியாக வைத்திருப்பதுடன் உற்பத்தி, வேலைவாய்ப்பு என்பவற்றில் ஏற்படுகின்ற தளம்பல்களைத் தவிர்த்தல். சென்மதி நிலுவையில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான குறைநிலைகளைத் தவிர்த்து சமநிலையைப் பேணுதல்.

- பணவீக்கம் நிலவும்போது மிகைநிலை வரவு செலவுத்திட்டதினையும், பணச்சுருக்கம் நிலவும்போது குறைநிலை வரவு செலவுத்திட்டத்தினையும் தயாரித்தல்.
- வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கு பணவீக்கத்தை ஏற்படுத்தக் கூடிய மூலங்களில் இருந்து கடன் பெறுதலைத் தவிர்த்தல்.
- மறைமுகவரிகளில் பெருமளவில் தங்கியிருத்தலைக் குறைத்தல்.
- விலைக்கட்டுப்பாடுகளை விதித்தல்.
- ஏற்றுமதி வருமானம், இறக்குமதி செலவுகள் என்பவற்றை ஒழுங்குபடுத்தல் மூலம் நாணயமாற்று வீதத்தை உறுதியாக வைத்திருத்தல்.

**வினா:**

ஆ) அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் இடம்பெறும் மூலதனச் செலவு என்பதால் கருதப்படுவது யாது? அதன் முக்கியத்துவம் யாது?

**விடை:**

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கு தேவையான மூலதனச் சொத்துக்களை உருவாக்குவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளே , மூலதனச் செலவாகும். அதாவது, ஒரு வருட காலத்திற்கும் மேலாக நிலைத்து நிற்கக் கூடிய மெய்ச்சொத்துக்களான இயந்திரங்கள், கருவிகள், கட்டடங்கள், தளபாடங்கள் போன்றவற்றை உருவாக்குவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளே, மூலதனச் செலவாகும். இவை, மீண்டெழும் செலவுகள் அல்ல. தொடர்ந்து, பல ஆண்டுகளுக்கு பயன்பெறுவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை இது குறிக்கின்றது.

**முக்கியத்துவம்**

அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் நாட்டின் முதலீடுகளாகக் கருதப்படுகின்றன. இவற்றின்மூலம் நாட்டின் மூலதன இருப்புக்கள் அதிகரிக்கின்றன. மேலும், இச் செலவுகளின் ஊடாக அரசாங்கம் வருமானம் பெறுவதற்கும் பல வழிகள் உண்டு. இம்மூலதனச்செலவுகள் நாட்டின் மூலதன இருப்புக்களை அதிகரிப்பதன் மூலம் பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துகின்றன. இவற்றின்மூலம் போக்குவரத்து, தகவல் தொடர்பு வசதிகள் உருவாக்கப்படுகின்றன. இம்மூலதனச் செலவுகளினால் புதிய உற்பத்தி இயலளவு உருவாக்கப்படுகின்றன. நாட்டின் தொழில் வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. எனவே, ஒரு நாட்டின் பொருளாதார நலனுக்காகவே மூலதன செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**வினா:**

இ) அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்க வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைச் செலவுகளின் வகைப்படுத்தலை சுருக்கமாக விபரிக்குக.

**விடை:**

| | | | |
|---|---|---|---|
| பொருட்கள் சேவைகள் மீதான செலவு.......... | 48% | - | 51% |
| வட்டிக் கொடுப்பனவு.......................................... | 28% | - | 30% |
| நடைமுறை மாற்றல்கள்..................................... | 20% | - | 23% |

**வினா:**

8. அ) அரசாங்க சேமிப்பு என்றால் என்ன? அதன் முக்கியத்துவம் யாது?

**விடை:**

நடைமுறைக்கணக்கு மிகையே அரசாங்க சேமிப்பாகும். மொத்த அரசிறையிலும் பார்க்க அரசின் மொத்த நடைமுறைக் கொடுப்பனவு குறைவாகக் காணப்படும்போது ஏற்படும் மிகையே அரச சேமிப்பாகும். அரசின் வருமானம் அதனது நடைமுறைச் செலவுகள் முழுவதனையும் மேற்கொள்ளுவதற்குப் போதுமானதாக இருப்பதுடன் மூலதனச்செலவின் ஒரு பகுதியையும் மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். எனவே அரசசேமிப்பு முதலீடாக மாறுகின்றது. வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையின் அளவு குறையும். அரசின் கடன்கள் குறையும். தனியாருக்குக் கிடைக்கும் கடன் வசதிகள் அதிகரிக்கும்.

**வினா:**

ஆ) அரசாங்கம் கடன் பெறும் மூலங்கள் என்ற வகையில் உள்நாட்டுச் சந்தைக்கடன், உள்நாட்டுச் சந்தையில்லாக்கடன் என்பவற்றை வேறுபடுத்துக:

**விடை:**

**உள்நாட்டுச் சந்தைக்கடன்**

மத்திய வங்கி முற்பணம், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள், ரூபாப் பிணைகள் ஆகிய கடன் கருவிகளைப் பயன்படுத்தி வங்கித்துறை, வங்கியல்லாத்துறை மூலங்களிலிருந்து அரசாங்கம் பெறுகின்ற கடன்களே உள்நாட்டுச் சந்தைக்கடன் ஆகும்.

**உள்நாட்டுச் சந்தையில்லாக்கடன்**

அரசாங்கத்திற்குள்ளே காணப்படும் மிகைகளிலிருந்து பெறப்படும் கடன்கள், அதாவது அரசாங்கத்திற்குச் சொந்தமான அமைப்புக்களிலிருந்து பெறப்படும் கடன்கள், திணைக்களங்களிலிருந்து பெறப்படும் நிர்வாகக் கடன், திறைசேரி வைப்புக்கள் விதவைகள், அனாதைகள் உபகார நிதியம் போன்றவற்றிலிருந்து பெறப்படும் கடன்.

**வினா:**

இ) உள்நாட்டுச் சந்தையில் வங்கித்துறைக்கடன், வங்கியல்லாத்துறைக்கடன் என்பவற்றின் விளைவுகளில் நீர் காணும் வேறுபாடு யாது?

**விடை:**

**வங்கித்துறைக் கடனின் விளைவுகள்**

- மத்திய வங்கி, வணிக வங்கிகள் ஆகிய வங்கித்துறை மூலங்களிலிருந்து பெறப்படும் கடன்களினால் பணநிரம்பல் அதிகரித்து பணவீக்கவிளைவுகள் தோன்றும்.
- மத்திய வங்கியிலிருந்து பெறப்படும் கடன்களினால் புதிய நாணயங்கள் வெளியிடப்பட பணநிரம்பல் அதிகரித்து பணவீக்க விளைவுகள் தோன்றும். வணிக வங்கிகளிலிருந்து கடன்களைப் பெறும்போது பண ஆக்கம் நடைபெறுவதனால் பணநிரம்பல் அதிகரித்துப் பணவீக்க விளைவுகள் தோன்றும்.

**வங்கியல்லாத்துறை கடனின் விளைவுகள்**

- தேசிய சேமிப்பு வங்கி, ஊழியர் நம்பிக்கை நிதியம் போன்ற வங்கியல்லாத்துறை மூலங்களிலிருந்து கடன்பெறும்போது ஏதோவொரு வடிவில் காணப்படும் சேமிப்பிலிருந்து கடன் பெறுவதனையே குறிக்கின்றது.
- இவற்றிலிருந்து கடன்பெறும்போது பணநிரம்பல் அதிகரிக்கமாட்டா. பணவீக்க விளைவுகள் தோன்றமாட்டா.

பொருளியல் ஆசிரியர்: S.வரதராஜன்
B.A. (Hons)

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

சிந்தனைக்கு
*வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை.*
- திருக்குறள்.

# நமது நோக்கு

## அதிகாரபூர்வமான ஆதரவு!

**சுவிற்சர்லாந்து சமஷ்டி ஆட்சியமைப்பைப் பற்றி ஆராய்வதற்கென அங்கு சென்ற விடுதலைப் புலிகளுக்கு அதிகாரபூர்வரீதியாக அரசவரவேற்பு அளிக்கப்பட்டிருப்பதோடு, அரச விருந்தினர்களாக அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறது அந்த நாடு.**

**விடுதலைப் போராட்ட வரலாற்றில், அதிகாரபூர்வமாக வெளிநாட்டு அரசொன்றின் அழைப்பையேற்று விடுதலைப் புலிகள் சென்றுள்ளமை - இதுவே முதற் தடவையெனக் கருதப்படும் நிலையில், இந்த விஜயம் வரலாற்று முக்கியத்துவமுடையதாகின்றது.**

**நோர்வேயின் மத்தியஸ்தத்துடனான அமைதி முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் - சர்வதேச அரங்கில் - ஈழத்தமிழர்களின் பிரச்சினை வெகுவான கவனஈர்ப்பைப் பெற்றுள்ள நிலையில், இராஜதந்திர ரீதியில் விடுதலைப் புலிகள் பெற்று வரும் வெற்றிகரமான நகர்வுகளில், அடுத்த கட்ட பரிணாமத்தினை சுவிஸ் நாட்டுக்கான விஜயம் குறித்து நிற்கிறது.**

**ஏற்கனவே - ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டதும், சிறப்புரையாற்றியதும் - விடுதலைப் புலிகளின் இராஜதந்திர வெற்றிகளில் குறிப்பிடத்தக்கதாக இருந்ததைத் தொடர்ந்து, சுவிஸ் அரசாங்கத்தின் அழைப்பும் வரவேற்பும், விடுதலைப் புலிகளைத் தனியே போராட்ட அமைப்பென்ற நிலையில் மட்டும் தற்போது சர்வதேசம் நோக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது.**

**ஈழத்தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக, தமிழினத்தின் ஆட்சியதிகாரத்தைக் கொண்டு செலுத்துபவர்களாக விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளப்படுவதைப் புலப்படுத்துவதாக சர்வதேசத்தின் நடவடிக்கைகள் அமைகின்றன.**

**இந்த இராஜதந்திர வளர்ச்சிநிலை - இலங்கைத் தீவின் ஆட்சியதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் வலுமிக்க சக்தியாக விடுதலைப் புலிகளைச் சுட்டிக் காட்டுவதை, சுவிற்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சின் கருத்துக்களும் வெளிக்காட்டுகின்றன.**

**பேர்னில், சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சகத்தில் நடந்த கலந்துரையாடலைத் தொடர்ந்து, சுவிஸ் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட கருத்தில் - மனித உரிமைகள் விடயத்திலும், நல்லாட்சியிலும் பேச்சுக்களில் ஈடுபடும் இரண்டு தரப்பும் சம அந்தஸ்து பெறுவதான திட்டத்தைத் தாம் வரவேற்பதாகத் தெரிவித்துள்ளது.**

**இக்கருத்தானது - இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் சர்வதேசம் எதிர்பார்க்கும் - சம அந்தஸ்து பெறும் தீர்வினை வலியுறுத்துவதாகவே அமைகின்றது.**

**அண்மையில், ஓரிரு தினங்களுக்கு முன்னர் - ஒஸ்லோவில், மாவீரர் தின சிறப்பு நிகழ்வொன்றில் உரையாற்றிய கலாநிதி. அன்ரன் பாலசிங்கமும் - ஐ.நா. சாசனம் அங்கீகரித்த வழியில்தான், விடுதலைப் புலிகள் கோரும் உள்ளக சுயநிர்ணயம் கொண்ட சுயாட்சிக் கோரிக்கையும் இருப்பதாகக் கூறி - ஒத்த கருத்தினை வெளியிட்டிருந்தார்.**

**எனவே - தமிழர்களின் தீர்வு யோசனையின் பேரில் - கடந்தகாலங்களைப் போல திரிவுபடுத்துவதற்கும், கண்முடித்தனமான எதிர்ப்பைக் காட்டுவதற்கும் - இனி எவருக்கும் வாய்ப்பிருக்கப்போவதில்லை.**

**இதனையே - அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஒஸ்லோவில் கண்ட இணக்கத்திற்கான - வெளிப்படையான எதிர்ப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களும் வெளிவிடாமலிருப்பதற்குக் காரணமாகவும் அமைந்துள்ளது.**

**இந்த நிலையில், இனிமேலும் - தமிழர்களை ஏமாற்றுவதற்கோ அல்லது அவர்களது நியாயமான நிலைப்பாட்டினை எதிர்க்கவோ முனைந்தால் - அது சர்வதேசத்தினை ஏமாற்றுவதாகவும், எதிர்ப்பதாகவுமே அமையும் என்பதை - தென்னிலங்கைக்கு உணர்த்த வைத்ததும் - விடுதலைப்புலிகளுக்கு கிடைத்துள்ள மற்றுமொரு இராஜதந்திர வெற்றி என்றே கூறலாம்.**

# பிரபாகரன் எங்களுக்கு நண்பன்; ஆனால் இந்திய நலன் பாதிக்காது!

## ரிரோன் பெர்ணான்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் செய்து கொள்ளும் எந்தவொரு உடன்படிக்கையோ அல்லது தீர்வோ இந்திய நலன்களைப் பாதிக்காது என வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ, இந்திய வெளிவிவகாரச் செயலர் கன்வால் சிபாலிடம் உறுதி வழங்கியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இந்த உறுதி வழங்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது -

அணிசேராக் கொள்கையை இந்தியா தொடர்ந்து பின்பற்றும். பிராந்திய நலன்களுக்கு குறிப்பாக - இந்திய நலன்களுக்கு விரோதமான முயற்சிகள் எதுவும் எடுக்கப்பட மாட்டாது.

இந்தச் சமாதானப் பேச்சுக்களுக்கு இந்திய அரசாங்கத்தின் ஆதரவு மட்டுமன்றி எதிர்க்கட்சித் தலைவர் சோனியா காந்தியின் ஆதரவும் உள்ளது.

எதிரி கைநீட்டும் போது ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிரியை நண்பனாக்கிக் கொள்ள வேண்டும் என ஜவகர்லால் நேரு கூறினார். இந்தவகையில்தான் நாம் பிரபாகரனுடன் நட்பை ஏற்படுத்தியுள்ளோம்.

எமக்கு நண்பனாக பிரபாகரன் கிடைத்திருக்கிறார் என நினைக்கிறேன். இந்த நட்பு இந்திய நலன்களைப் பாதிக்காது என கன்வால் சிபாலிடம் ரிரோன் பெர்ணான்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

# கருணாவைச் சந்தித்துப் பேசுகிறீர்களா? தமிழ்க்குழுக்களிடம் மட்டு. படையதிகாரி!

## ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் காணமற்போனது பற்றிய சந்திப்பில் கேள்வி

(மட்டக்களப்பு)

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புளொட் ஆகிய கட்சிகளின் முக்கியஸ்தர்கள் மட்டக்களப்பு இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. 23ஆவது படையணித் தளபதி பிரிகேடியர் எஸ்.ஆர்.பாலசூரிய, மேஜர் மங்கள பெரேரா, கப்டன் கருணாரட்ண ஆகியோரையே இத் தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் சந்தித்தனர்.

வரதர் அணியைச் சேர்ந்த துரைரட்ணம், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த பிரதீபன் பரணிதரன், சிவா ஆகியோரும் புளொட் சார்பில் ரதனும் ஜூலியும் இச்சந்திப்பில கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது மூன்று ஈ.பி.டி.பியினர் மட்டக்களப்பில் காணாமல் போனது தொடர்பாகவும், தமிழ்க் கட்சியின் பாதுகாப்புத் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. தமக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும் என இக்கட்சிகளின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு,

பிரிகேடியர் பாலசூரிய பதிலளித்தபோது -

அரசியல் வேலைகளில் ஈடுபட அனைத்துக் கட்சியினருக்கும் இராணுவம் பாதுகாப்பு வழங்கும் என்றும், இதற்குப் பொலிஸார் ஒத்துழைப்பு வழங்குவார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தோர், புலிகளின் தளபதி கேணல் கருணாவைச் சந்தித்துப் பேசுவதற்கு ஏற்பாடு செய்து தருவதாக பிரிகேடியர் பாலசூரிய கூறியிருந்ததாகவும், அதற்கு தமது மேலிடத்துடன் ஆராய்ந்து பதிலளிப்பதாகவும் தமிழ்க்கட்சிப் பிரமுகர்கள் தெரிவித்துள்ளனர்.

# நீர்கொழும்புச் சிறையில் கைதிகளுக்குத் திருமணம்!

நீர்கொழும்புச் சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு கைதிகளுக்கு சிறைச்சாலை அத்தியட்சகர் திருமணம் செய்து வைத்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

றோகித சமிந்த மற்றும் அனுலீன் கீல் ஆகிய இருவரும் கமரகொட மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும்போதே காதலர்களாக இருந்தனர். இவர்கள் தற்போது நீர்கொழும்பு சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தாம் இருவரும் திருமணம் செய்துகொள்ளப்போவதாக பிரதம சிறைச்சாலை அதிகாரியிடம் இவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் இத்திருமணத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பிரதம சிறைச்சாலை அதிகாரி ஆர்.எஸ்.பொன்சேகா இருவருக்கும் பதிவுத் திருமணத்தைச் செய்து வைத்தார். திருமணத்தின்போது பெற்றோரும் உடனிருந்தனர்.

# இருண்ட சுரங்கத்தில் தெரியும் ஒளி இணக்கம் குறித்து வாசுதேவ கருத்து!

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமஷ்டித் தீர்வொன்றைக் காண இணங்கியிருப்பதாவது - இருண்ட சுரங்கத்தில் தெரிகின்ற சிறு வெளிச்சம்போல நம்பிக்கை தருவதாக இருப்பதாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும். தனிநாட்டுப் பிரச்சினை இத்தோடு முடிவுக்கு வந்து விடும். மீண்டும் இப்பிரச்சினை யுத்தத்துக்குச் செல்லாமல் பார்க்க வேண்டிய பொறுப்பு அனைவருடையதுமாகும்.

இந்தச் சமாதான முயற்சிகளில் இலங்கை அரசு, தமிழீழ விடுதலைப் புலிகள், நோர்வே ஆகிய தரப்புக்களுக்கு மட்டும் பொறுப்பு என ஒதுங்கிவிட முடியாது. இதில் அனைவருக்கும் பொறுப்புகள் உள்ளன எனவும் - வாசுதேவ நாணயக்கார மேலும் தெரிவித்துள்ளார்.


# சார்க் உச்சி மாநாடு காலவரையின்றி ஒத்திவைப்பு

(கொழும்பு)

தெற்காசிய நாடுகளின் உச்சிமாநாடு (சார்க்) காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சார்க் உச்சிமாநாட்டில் பங்குபற்றுவதற்கு இந்தியா உத்தியோகபூர்வமாக இணக்கம் தெரிவிக்கவில்லை. இதனால் மாநாட்டை ஒத்திவைப்பதாகப் பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இந்த மாநாடு இன்று 11ஆம் திகதிமுதல் 13ஆம் திகதி வரை பாகிஸ்தானின் தலைநகரில் நடைபெறுவதாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. சார்க் செயலகம், அங்கத்துவ நாடுகளோடு கலந்துரையாடி, புதிய திகதி அறிவிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.



# குறைதீர் மன்றம்

## ரெலிகொம் வெட்டிய குழிகளால் இடையூறு

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினர் தொலைத்தொடர்பு கேபிள்களைத் தரைக்குக்கீழ் கொண்டு செல்வதால் வீதியோரத்தில் பாரிய குழிகள் வெட்டப்படுகின்றன. தற்பொழுது மாரிகாலம் என்பதால் மழைவெள்ளம் குழிகளையும் பள்ளங்களையும் நிரவி நிற்கின்றது. இதனால் வீதியில் செல்லும் நாம், வீதி விபத்துக்கள் ஏற்படும் என அச்சங்கொள்ள வேண்டியுள்ளது.

தாங்கள் இவ்விடயத்தினை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு குறைதீர் மன்றம் மூலமாக இப்பிரச்சினையை நிவர்த்தி செய்வீர்களா?

*கே.கோணேஸ்வரன்,*
*அத்தியடி,*
*யாழ்ப்பாணம்.*

**நமது ஈழநாடு :-**

தங்கள் விடயம் தொடர்பாக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தினருடன் தொடர்புகொண்டபோது - தங்களால் வெட்டப்பட்ட குழிகளை நிரவி மீண்டும் வீதிகளைச் செப்பனிட வேண்டி, முறைப்படி யாழ்.மாநகர சபைக்கும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும், அவரவர் பொறுப்பாகவுள்ள வீதிகளின் அளவிற்கேற்பப் பணத்தினை உரியவர்களிடம் செலுத்திவிட்டதாக ரெலிகொம் பொறியியலாளர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து மாநகரசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகியோருடன் தொடர்புகொண்டபோது- குழிகள் ஆழமாக வெட்டப்பட்டிருப்பதால், குழிகள் நிரவப்பட்டதன் பின், மண் படிவதற்கு ஒரு குறித்த காலப்பகுதி தேவை, அவ்வாறு மண் படிந்ததன் பின்னரே, வீதியினைச் செப்பனிடலாம் எனக் கூறியுள்ளனர். மேலும், தமது தொழிலாளிகள் மூலம் ரெலிகொம் வேலை செய்து முடித்த குழிகளில் மீளவும் மண் போட்டு நிரவிவிடுவதாகவும் மாநகர சபையினர் உறுதி கூறியுள்ளனர்.

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கான நிவாரணம்

பொது நிர்வாகச் சுற்றறிக்கை 49/89இற்கு அமைவாக வன்செயலால் - வீடுகள், சொத்துக்கள் சேதமடைந்தால் அரசாங்க ஊழியர்களும் சில குறிப்பிட்ட கூட்டுத்தாபன ஊழியர்களும் நஷ்டஈட்டுக்கு, வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைக்கு (RRAN) விண்ணப்பிக்க முடியும்.

மேற்படி சுற்றறிக்கைக்கு அமைவாக சமுர்த்தி அதிகார சபையில் கடமையாற்றும் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியுமா?

*வி.சிவரூபன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

**நமது ஈழநாடு :-**

தங்கள் விடயமாக சமுர்த்தி அதிகார சபையின் உதவி ஆணையாளர் என்.சிவபாதத்துடன் தொடர்பு கொண்டபோது,

சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் இருந்து தங்களிடம் நஷ்டஈட்டிற்காக வரும் அனைத்து விண்ணப்பங்களையும் தமது தலைமையகத்திற்கு அனுப்பி வைப்பதாகக் கூறியுள்ளார்.

மேலும், நஷ்டஈட்டுக் கொடுப்பனவு பற்றிய தீர்மானத்தினை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சே முடிவு எடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். எவ்வாறிருந்தாலும், தாங்கள் தங்களுடைய உரிய மேலதிகாரிகளுக்கு ஊடாக நஷ்டஈட்டுக்கான விண்ணப்பத்தினை அனுப்பலாம்.

# இலங்கையில் கூட்டுறவுக்கென தேசியக் கொள்கை வகுக்குமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுள்ளோம்!

**அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் லயனல் சமரசிங்கவுடனான நேர்காணல் இது.**

**கேள்வி:- தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் என்ற முறையில்- இதன் தோற்றம், கட்டமைப்பு, செயற்பாடுகள் குறித்து அறிமுகப்படுத்துவீர்களா?**

**பதில்:-** மாவட்ட ரீதியிலும், தேசிய ரீதியிலும் உள்ள கூட்டுறவுச சங்கங்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தேசிய கூட்டுறவுச் சபையானது - சர்வதேச கூட்டுறவு இணையத்திலும் அங்கம் வகிக்கிறது. எமது தேசிய கூட்டுறவுச் சபையில் 26 மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் அங்கம் வகிக்கின்றன. அவை அனைத்தும் மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. குறிப்பாக கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி நிலையங்கள் -யாழ்ப்பாணம், குருநாகல், காலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. அதன் செயற்பாடுகளுள் பிரதானமானது, கூட்டுறவுக் கல்விக்குப் புறம்பான வங்கி முறைகளையும் அறிமுகப்படுத்தி வருதல் ஆகும். இவை தவிர கட்டடக் கலைஞர் பிரிவு, கூட்டுறவு அச்சகப் பிரிவு, வரி ஆலோசனைப் பிரிவு ஆகியனவும் இயங்குகிறன. தேசிய கூட்டுறவு மகளிர் சம்மேளனம் ஒன்று இயங்குகிறது. அதன் தலைவியாக திருமதி பிறேமா சூரியா இருக்கின்றார். எமது கல்விப்பணிக்கு மக்கள் வங்கியே உதவி வருகின்றது. தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவர் என்ற வகையில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையில் ஒரு அங்கத்தவராகப் பணிபுரிந்த வருகிறேன். கூட்டுறவாளர்கள் எல்லோருக்கும் சேர்த்து கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி என்ற நிறுவனத்தையும் நடாத்தி வருகிறோம். தற்போது அதன் 14 கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்மாத இறுதியில் வவுனியாவில் ஒரு கிளையும், 2003 ஜனவரியில் மட்டக்களப்பில் ஒரு கிளையும் நிறுவப்படவுள்ளன. இதிலிருந்து 16 கோடி ரூபா வெளிவாரி நிறுவனங்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

**கேள்வி:- கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனியை யாழ்ப்பாணத்தலும் அறிமுகப்படுத்தினால் என்ன?**

**பதில்:-** இவ் விடயம் தொடர்பாக கூட்டுறவாளர் சிவமகாராஜா, மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் கனகசபாபதி மற்றும் இத் துறையோடு தொடர்புடையவர்களுடன் கலந்தாலோசித்து அதற்கான முடிவுகள் எடுக்கப்படும்.

இது தொடர்பாக ஒரு திட்டம் உள்ளது. அதாவது, கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி மூலமாக ஒவ்வொரு பாடசாலை மாணவர்களிடமும் இருந்து ஆண்டுக்கு 60 ரூபா வீதம் அறவிட்டு, கூட்டுறவு முறைகளை அறிமுகப்படுத்தி அதன் மூலமாகக் கிடைக்கக் கூடிய நன்மைகளை, அவ்களுக்குக் கிடைக்கச் செய்தல் ஆகும். இதன் மூலம் நாம் எதிர்பார்ப்பது காசு சம்பாதிப்பது அல்ல. பிள்ளைகள் நலன் பெறல், சுகாதார உடல்நலத் தேவைகளுக்கு உதவுதல் என்பனவே ஆகும். பொல நறுவை மாவட்டத்தைப் பொறுத்தளவில் அங்கு 18 ஆயிரம் பிள்ளைகள் இவ்வாறு காப்புறுதி செய்துள்ளார்கள். சிறப்பாகத் தொற்று நோய் ஒழித்தல் என்பது தான் இதன் நோக்கமாகும்.

கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி மூலமாக கூட்டுறவு ஊழியர்களுக்கு ஓய்வூதியத் திட்டமொன்றை உருவாக்குவதும் எம் நோக்கங்களுள் ஒன்றாகும். அதேபோன்று கூட்டுறவுச் சங்கங்களில் இயங்கி வரும் இயக்குநர் சபையினருக்கு காப்புறுதித் திட்டங்களை அறிமுகப்படுத்தி, அதன் மூலமாக அவர்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுத்தலும் இதன் நோக்கமாகும். இதில் அவர்களது வயதெல்லை விதிவிலக்கானது. நான் இங்கு தங்கியிருக்கும் காலத்துள் இங்குள்ள நிலைமைகளை அறிந்து அதற்கேற்ற வகையில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளவுள்ளேன்.




**கேள்வி:- சர்வதேச மட்டத்தில் உங்கள் தொடர்புகள் எவ்வாறு இருக்கிறது?**

**பதில்:-** சர்வதேச கூட்டுறவு அமைப்பைப் பொறுத்த அளவில் மனிதவள அபிவிருத்திக் குழுவில் அங்கத்தவராகச் செயற்பட்டு வருகின்றேன். அதேநேரத்தில், சர்வதேச கூட்டுறவுத் தாபனத்தின் ஆசிய பசுபிக் பிரிவின் இயக்குநராகவும் இருந்துவருகிறேன். சர்வதேச கூட்டுறவு இணையம் பல்வேறு ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்கி வருகின்றது. கூட்டுறவு வைத்தியசாலைகளை உருவாக்குதல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனை அமைப்பதும் எமது திட்டங்களுள் ஒன்றாகும். இது இலங்கையைப் பொறுத்தளவில் ஒரு திருப்பம் ஆகும். மகளிர் வேலைத்திட்டங்கள் மூலமாக சுயதொழில் முயற்சித் திட்டங்களை மேற்கொள்வதும் எமது திட்டமாகும். சர்வதேச கூட்டுறவு இணையம் புலமைப்பரிசில்களையும் வழங்கி வருகின்றது.


லயனல் சமரசிங்க

**கேள்வி:- அரசின் கூட்டுறவுக் கொள்கை உங்கள் செயற்பாட்டுக்கு ஏதாவது தடையாக இருக்கிறதா?**

**பதில்:-** இரண்டு வருடங்களுக்கு முன்னர் கூட்டுறவு ஊழியர்களுக்கான ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. புதிய வரவு செலவுத் திட்டத்தின் மூலமாக கூட்டுறவுக்குத் தாக்கங்கள் ஏற்பட்டுத்தான் இருக்கின்றன. அதனைக் குறைப்பதற்காக மின்வலு மற்றும் எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரியவுடன் கலந்துரையாடியுள்ளேன். வரிச்சுமையைக் குறைப்பது தொடர்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அதில் நானும் அங்கத்தவராக இருக்கிறேன். கூட்டுறவு அமைச்சின் செயலாளர் இதனை பிரதமருக்குத் தெரியப்படுத்தியதை அடுத்து- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கரு ஜெயசூரியாவுக்கு இது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பணித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இது தொடர்பாக நிதி அமைச்சர் கூட்டம் கூடி, அதிலிருந்து எமக்கு சலுகை அளிப்பதாக உறுதியளித்துள்ளார். எமக்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றே நினைகின்றேன். இலங்கையைப் பொறுத்தளவில் கூட்டுறவுக்கெனத் தேசியக் கொள்கைக் கிடையாது. அதனை வகுக்குமாறு நாம் கேட்டுள்ளோம். இதன் சிறப்பு- எந்த அரசு பதவிக்கு வந்தாலும் கூட்டுறவு இயக்கமானது அரசியலில் இருந்து விலகியே இருக்க வேண்டும் என்பதாகும். வேறு நாடுகள் தமது வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்போது கூட்டுறவு இயக்கத்துக்கென ஒரு ஒதுக்கீட்டையும் சமர்ப்பிப்பார்கள். ஆனால், துரதிஷ்டவசமாக இலங்கையில் அது இல்லை. அவ்வாறான ஒரு முறையொன்றை அறிமுகம் செய்யுமாறு நாம் கேட்டுள்ளோம்.

**கேள்வி:- கூட்டுறவுத் துறையூடான உங்கள் புதிய முயற்சிகள் பற்றி....?**

**பதில்:-**எமது புதிய முயற்சிகளுள் ஒன்றாகவே வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவராக இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையைப் பதிவு செய்தலும், அதன் மூலமாகப் பிராந்திய, பிரதேச மட்ட பிரதிநிதியாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை நியமிப்பதும் ஆகும். அதன் மூலம் வெளிநாட்டு வேலைகளுக்குச் செல்பவர்களைத் திரட்டுவதும், அதன்போது அவர்களுக்குரிய பயணச் செலவுகளை வழங்குதல், காப்புறுதி செய்தல் போன்ற பணிகளைச் செய்து அவர்களுக்கு அதிக செலவில்லாது அனுப்பிவிட்டு, அதனால் நாம் ஒரு சிறிய தொகையை உழைத்தலும், சேவை செய்வதும் புதிய ஒரு முயறசியாக உள்ளது. இதற்கான ஒரு திட்டத்தை நாம் வரைந்து கொண்டு இருப்பதுடன் இது மந்திரிசபை மட்டத்திலும் ஆராயப்பட்டு வருகிறது.

**சந்திப்பு:-**
**கணேஷ், லிவிங்ஸ்டன்**

# அமைச்சர் ஹக்கீம் - அதாவுல்லா இழுபறி யாழ். முஸ்லிம் மக்கள் நினைப்பது என்ன?

**முஸ்லிம் காங்கிரஸிற்குள் தற்போது ஏற்பட்டுள்ள தலைமைத்துவ இழுபறிநிலை தொடர்பாக, யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை அறிய அவர்களில் சிலரைச் சந்தித்தோம். அந்தச் சந்திப்பில் இருந்து.....**

**அனாம்**



கடந்த மூன்று மாதத் திற்கு முதல் முஸ்லிம் காங்கிரஸ் ஒற்றுமையாக இருந்தது, புலிகளின் அனுமதியுடன் நாங்கள் யாழ்ப்பாணத்திற்கு வரமுடிந்தது. இப்ப அவங்களுக்குள்ள பிளவு ஏற்பட்டிருக்கு. இந்த பிளவுகளால முஸ்லிங்களாகிய எங்களுக்குக் கவலையாக இருக்குது. இப்படி இவங்கட பிளவுகள் நீடிச்சுது என்றால் முஸ்லிம் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் போகும்.

அதாவுல்லாவின் தலைமைத்துவம் எப்படி இருக்குமோ என எமக்குத் தெரியாது. ஆனால் ஹக்கீமிட தலைமைத்துவத்தில நாங்கள் பல நன்மைகளைப் பெற்றிருக்கிறோம். எனவே, நாங்கள் ஹக்கீமிட தலைமைத்துவத்தைத்தான் விரும்புகிறோம். அதோட முஸ்லிம் காங்கிரஸிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் நெருங்கிய உறவு இருக்க வேண்டும். இந்த உறவை ஹக்கீமாலதான் பேண முடியும். அதாவுல்லா செய்தது பிழை. ஏனென்றால், ஹக்கீம் நோர்வே போறதுக்கு முதல் எல்லா பாராளுமன்ற உறுப்பினர்களையும் கூப்பிட்டுக் கதைத்து விட்டுத்தான் போனார். இப்படியிருக்கேக்க, அவர் நோர்வே போன பிறகு அவரைக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நீக்கியத்து சரியான பிழை.

**பாரூக்**



ஹக்கீமும் தலைவர் வே.பிரபாகரனும் கதைத்துச் செய்து கொண்ட ஒப்பந்தத்தாலதான் நாங்கள் இன்றைக்கு யாழ்ப்பாணம் வந்திருக்கின்றோம். நாங்கள் ஹக்கீமிட தலைமைத்துவத்தத்தான் ஆதரிக்கின்றோம். நடக்கிற பிரச்சினைகளைப் பார்க்கும் போது, பிரதேசம் சம்மந்தமான பிரச்சினை போலத்தான் தெரியுது. இப்படி இருக்க முடியாது. ஒரு கட்சிக்கு ஒரு தலைவர்தான் இருக்க முடியும். அதாவுல்லா செய்தது பிழை என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால் ஒருதர் இல்லாத நேரத்தில அவரைப் பற்றி கதைப்பது பிழை. அதோட முஸ்லிங்கள் ஹக்கீமிட தலைமைத்துவத்தத் தான் விரும்புவினம், ஹக்கீமிட தலைமையைத் தான் ஏற்பினம், இதற்கு நல்ல உதாரணம் பேரியல் அஸ்ரப்.

**மூபின் (முஸ்லிம் காங்கிரஸின் யாழ். மாவட்டச் செயலாளர்)**




ஹக்கீமிட அரசியல் அனுபவங்கள், சர்வதேச தொடர்புகள் எல்லாத்தையும் வைத்துப் பார்க்கேக்க ஹக்கீம்தான் ஓர் சிறந்த தலைவராக இருக்க முடியும். ஹக்கீம், அஸ்ரப்பிட காலத்தில இருந்தே கட்சியின் காரியதரிசியாக இருந்தவர். இதனால் சில அரசியல் அணுகுமுறைகள் ஹக்கீமுக்கு விளங்கும். ஹக்கீமிட தலைமைத்துவம் தேசிய மட்டத்தில ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவுல்லா கிழக்கு மாகாண முஸ்லிமிடம்தான் தலைமைத்துவம் இருக்கவேணும் என நினைக்கிறார். முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தேசியக் கட்சியாக இருந்தால்தான் நாங்கள் அதுல செயற்படவோ, ஆதரவு கொடுக்கவோ முடியும். இப்ப முஸ்லிம் காங்கிரஸிற்கு அதாவுல்லா தலைவராக இருந்தால், கிழக்கு மாகாணத்தின் நலன்தான் முதன்மைப்படுத்தப்படும். அதோட முஸ்லிம் காங்கிரஸ் ஒரு தேசிய அமைப்பாக இருக்க முடியாது. எனினும், முஸ்லிம் காங்கிரஸிற்குள் நாம் ஒற்றுமையாக இயங்க வேண்டும் என்பது தான் எங்கட விருப்பம். அதோட முஸ்லிம் காங்கிரஸிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இருக்கிற உறவு ஹக்கீம் இருந்தால்தான் நன்றாக இருக்கும் என்றில்லை. அரசியலில் தலைமைகள் மாறுவது வழமை. இதனால் பிற கட்சிகளின் உறவு பாதிக்கும் என நான் நினைக்கவில்லை. இது ஒரு தனிப்பட்ட தலைவரின் முடிவும் இல்ல. இன்றைக்கு நாட்டிட சமாதானத்தையும், அமைதியான ஒரு வாழ்வையும், எதிர்கால முஸ்லிம்களின் நலன்களையும் சார்ந்த விடயங்களை முஸ்லிம்கள் விடுதலைப் புலிகளோட பேசி தீர்க்க வேண்டும். இப்படியிருக்கேக்க, அதாவுல்லா வந்தாலும் புலிகளோட பேசத் தான் வேண்டும்.

**சப்தீஸ்**



தலைமைத்துவங்களில இருககிறவங்க ஒற்றுமையாக இருக்க வேணும். இப்படி இவங்கள் ஒற்றுமையாக இருக்காட்டி மற்றவங்கள் ஒன்றும் செயய ஏலாது. அதோட கட்சி என்பது ஒரே கொள்கையுடன் பொதுநலமாக இவங்க வேணும். இப்ப எல்லாரும் சமாதானத்தை எதிர்பார்க்கினம். இந்த சமாதானத்தாலதான் நாங்கள் இங்க வரமுடிந்தது. எனவே பிளவுகள் பிரச்சினைகள் ஏற்படாம அனைவரும் சமாதானமாக இருக்க வேணும்.

**யுசெமா**



முஸ்லிம் காங்கிரஸில் ரெண்டு பிரிவு ஏற்பட்டிருக்கு. இதால தான் இந்தப் பிரச்சினை உருவாகியிருக்கு. இப்ப நடக்கிற சமாதானப் பேச்சுவார்த்தையைப்போல் ஹக்கீமுக்கும் - அதாவுல்லாவிற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும். இதுக்கு ஆளையாள் முன்வந்து கதைத்துப் பேசி, விட்டுக் கொடுக்க வேணும்.

இவங்கள் இப்படி பிளவுபட்டு பிரச்சினைப்பட்டுக் கொண்டு இருந்தாங்களென்றால் சமாதானப் பேச்சுக்கள் குழம்புறதுக்கும் வாய்ப்பிருக்கு.


எனவே, தனிப்பட்ட பிரச்சினையைப் பார்க்காம நாட்டில இருக்கிற முழு மக்களுடைய பிரச்சினையையும் பார்த்து நடந்து கொள்ளனும்.

**சந்திப்பு:**
**லிவிங்ஸ்டன்**




# நெல்லியடியில் பொதுமக்கள் மீது மேற் கொள்ளப்பட்ட அடக்குமுறையின் போது...












# காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் மறியற்போராட்டத்திலிருந்து...






படங்கள்
லிவிங்ஸ்டன், சந்திரமோகன்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# புலிகள் மீதான தடையை நீக்க அவுஸ்திரேலியா பரிசீலிக்கும்!

## கொழும்பு வந்த அந்நாட்டுப் பிரதம நீதியரசர் உறுதி

விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அவுஸதிரேலியா எதிர்காலத்தில் பரிசீலனை செய்யும் என இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலியா நாட்டின் பிரதம நீதியரசர் மார்க்கஸ் என்பீல்ட் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மாலை செயதியாளர்கள் சிலரைச் சந்தித்த அவா -

தற்போது நடைபெற்றுக் கொண் டிருக்கும் சமாதானப் பேச்சு வார்த்தையில் அவுஸ்திரேலியாவிற்குத் திருப்தியாக உள்ளது. சமாதானப் பேச்சுவார்த்தையை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் உதவி செய்வதற்கும் அவுஸ்திரேலியா விருப்பம் கொண்டுள்ளதாகத் தெரிவித்த நீதியரசர், போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்பதற்கும் அவுஸ்திரேலியா முன்வரும் என்றும் குறிப்பிட்டார்.

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இடம்பெறும் பேச்சுவார்த்தையை அவுஸ்திரேலிய அரசாங்கம் அவதானித்து வருகின்றது. விரைவில் இலங்கையில் அமைதி திரும்ப வேண்டும் என்பதே அவுஸ்திரேலியாவின் எதிர்பார்ப்பாக உள்ளது. விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதப் பட்டியலில் அவுஸ்திரேலியா இணைத்திருக்கின்றது : ஆனால், அது சர்வதேச ரீதியாக தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புப் பட்டியல். தனியே விடுதலைப் புலிகளுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டது அல்ல. அதனை நீக்குவதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு முடியும். அவ்வாறு நீக்குவதற்கான காலகட்டம் வந்திருக்கின்றதா என்பதை அவுஸ்திரேலிய அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை ஆரோக்கியமாக இருப்பதனால் புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு எமது அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்றும் அவர் தெரிவித்தார். எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யும் அவர் சந்தாப்பம் கிடைத்தால் வன்னிக்குச் செல்லவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் - thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
Better place for your Children
(சி-186)







# வவுனியாவில் இராணுவச் சிப்பாய் விடுதலைப் புலிகளிடம் சரணடைவு!

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்த இராணுவத்தின் விசேட படைப்பிரிவில் பணியாற்றிய சிப்பாய் ஒருவர், மனிதஉரிமை ஆணைக் குழுவிடம் நேற்று ஒப்படைக்கப் பட்டார்.

புத்தளம் கருவெலகஸ்வெவ என்னுமிடத்தைச் சேர்ந்த சுகத் துஷார தென்னக்கோன் (வயது 25) என்பவரே இராணுவத்திலிருந்து தப்பியோடிவந்து விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தவராவார்.



எழிலனும் சரணடைந்த சிப்பாயும்

இவரை மனித உரிமை ஆணைக்குழுவிடம் ஒப்படைத்த வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எழிலன், தற்போதைய சூழலில் சரணடைந்தவரின் விருப்பப்படி அவரை விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்க்க முடியாது என்றும் அவரது விருப்பத்தை நிறைவேற்றாமைக்கு கவலைப்படுவதாகவும் கூறினார்.

## மனித உரிமை...

ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதேநேரம், யாழ். மாவட்ட மனிதநேய அமைப்பினர் யாழ்ப்பாண அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்திலிருந்து நேற்றுக்காலை 10.30 மணியளவில் பேரணியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திற்கு வந்து அங்கு மறியற்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினருடன் இணைந்தனர்.

பின்னர் 11.30 மணியளவில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலக வளாகத்தில் மகஜர்கள் கையளிக்கும் நிகழ்வு மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் பரமநாதன் தலைமையில் நடைபெற்றது. மகஜர் ஒன்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி றொகான் சந்திரசேகரவிடம் கையளிக்கப்பட்டது.

தொடர்ந்து காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் சற்குணமும் மகஜர் ஒன்றைக் கையளித்தார். பின்னர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் இருந்து காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் கோஷம் எழுப்பியவாறு பேரணியாக யு.என்.எச்.சி.ஆர். அலுவலகத்துக்குச் சென்றனர். இங்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் சற்குணமும் மற்றும் இரு பிரதிநிதிகளும், யு.என்.எச்.சி.ஆர். சார்பில் அன்ரன் டிராஜ் மற்றும் றப்கேல் அடிஸ் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றி காணாமற்போனோர் சம்பந்தமான அறிக்கைகளை தலைமைப்பீடமாகிய ஜெனீவாவிற்கு அனுப்பி காணாமற்போனவர்களை கண்டுபிடிக்க உதவிகள் செய்வதாக தெரிவித்ததனர். பின்னர், செஞ்சிலுவைச் சங்கத்திற்கு சென்று யாழ். மாவட்ட பிரதிநிதியுடன் கலந்துரையாடியதுடன், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் மகஜர் ஒன்றையும் கையளித்தனர். (லி)

## மறியல்...

களில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அவசரசிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நேற்றைய மறியல் போராட்டம் நடைபெற்றது. கட்டைவேலி-நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கருகே காலை 11 மணியளவில் ஒன்றுதிரண்ட மக்கள், பேரணியாக நெல்லியடி ஈ.பி.டி.பி. அலுவலகத்தை நோக்கிச் சென்றனர். பொது மக்களின் இப் பேரணியை ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு அருகாமையில் வைத்துப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதனைத் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் ஒரு பகுதியினர் ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் பின்புறமாகவுள்ள நுழைவாயிலூடாக உட்புகுந்தனர். இதனைத் தடுக்கும் நோக்குடன் பொலிஸார் வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் அப்பகுதியில் பதற்றநிலை தோன்றியது. எனினும், பொதுமக்களின் மறியல் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது. இதனால் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. திடீரென நண்பகல் 12.30 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மக்கள் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததுடன் கண்ணீர்ப்புகைக் குண்டுகளையும் வீசினர். இதனால் பொதுமக்கள் சிதறி ஓடினர். பலர் மயக்கமுற்று ஸ்தலத்தில் வீழ்ந்தனர். இந்த நிலையில் பொலிஸார் அப்பகுதிக்கு விரைந்து சென்று பொதுமக்கள் மீது குண்டாந் தடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

அதேவேளை, யாழ். பொலிஸ் தலைமையகத்திலிருந்து 1.30 மணியளவில் விசேட கலகமடக்கும் பொலிஸ் படைப்பிரிவொன்று நெல்லியடிப் பகுதிக்கு விரைந்து வந்தது. இப்பொலிஸ் படைப் பிரிவினரும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொதுமக்களைத் தாக்கினர். விசேட பொலிஸ் வாகனமொன்றில் வந்த இப்பொலிஸ் படைப் பிரிவினர் நெல்லியடி கடைத்தெருப் பகுதிகளுக்கும் சென்று ஆங்காங்கே காணப்பட்ட பொதுமக்கள் மீதும், வர்த்தக நிலையங்களினுள்ளும் புகுந்து வர்த்தகர்கள் மீதும் துப்பாக்கி மற்றும் குண்டாந்தடிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதனால் காலை முதல மாலை வரை அப்பகுதியில் பதற்றம் நிலவியதுடன் இப்பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் யாவும் பூட் டப்பட்டு வீதிவெறிச்சோடிக் காணப்பட்டது. வீதியில் ஆங்காங்கே வீழ்ந்து கிடந்த சைக்கிள்கள் சிலவற்றை பொலிஸார் எடுத்துச் சென்றனர்.

(13,60,36,க,லி,ச)

## சுவிஸ்ஸில்...

கலந்துரையாடலொன்றும் நடத்தப் பட்டது. சுவிஸ் கண்ணிவெடியகற்றும் மனிதாபிமான நிறுவனப் பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகளைச் சந்தித்துப் பேசினர்.

நேற்றுமுன்தினம் நண்பகலளவில் பிரபல அரசியலமைப்பு நிபுணரும் சுவிஸ் நீதியமைச்சின் பிரதித் தலைவருமான பேராசிரியர் றொலிங்க மெடல் ஆழமான சந்திப்பொன்றை விடுதலைப் புலிகளின் குழுவினருடன் நடாத்தினார். இதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், சுவிஸ் வானொலிக்கும் தொலைக்காட்சிக்கும் பேட்டியொன்றையும் வழங்கினார்.

## ஐ.பி.சி. நிருபர்...

கங்களில் காயத்திற்குள்ளானார். தனது ஐ.பி.சி. அடையாள அட்டையைக் காண்பித்தும் குறிப்பிட்ட இடத்திற்குள் நுழைவதற்குத் தனக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதனால், பொலிஸ் மா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் என்பவர்களுக்கு எதிராகத் தான் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்திருப்பதாகவும் ஐ.பி.சி. நிருபர் தெரிவித்தார்.

## நெல்லியடியில்...

குச் சம்மதிக்கவில்லை. இதனால் சிகிச்சை மேற்கொள்ளாமல் மீண்டும திருப்பி அழைத்துச் செல்லப்படுவதற்கு முழுப்பொறுப்பும் தாம் ஏற்றுக் கொள்வதாக வைத்திய அதிகாரியிடம் பொலிஸார் கடிதம் கொடுத்ததைத் தொடர்ந்து அனைவரையும் பொலிஸார் அழைத்துச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், நள்ளிரவு தாண்டிய பின்னர்- பருத்தித்துறை பதில் நீதவான் மு.திருநாவுக்கரசுவின் இல்லத்துக்குக் கைதான இவர்கள் பொலிசாரால் அழைத்துச்செல்லப் பட்டனர். இவர்களுக்கு தடுப்புக் காவல் உத்தரவை வழங்குமாறு பொலிஸார் கோரியதையடுத்து இம் மாதம் 24ஆம் திகதி வரை இவர்களுக்கு தடுப்புக்காவல் உத்தரவு வழங்கப்பட்டது.

இவர்களில் சிகிச்சை அளிக்க வேண்டிய ஐவரையும் வைத்தியசாலையில் அனுமதிக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## மூடிக்கிடந்த...

இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தமையால் அப்பகுதியில் இரத்தம் சிந்திய நிலையில் காணப்பட்டது.

இப்பகுதியை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ். இணைப்பதிகாரி சென்று பார்வையிட்டதுடன் விசாரணையையும் மேற்கொண்டார்.

## 9 பொதுமக்கள்...

ராசா இந்திரகுமார் - கரவெட்டி (24), வல்லிபுரம் மகேந்திரம் - அல்வாய் வடக்கு (49), தெய்வேந்திரம் சுதர்சன் - முருகமூர்த்தி வீதி, நெல்லியடி (27), கதிரவேலு குகதேவன் - அல்வாய் தெற்கு (40), பொனனர் அருமைத்துரை - கரவெட்டி (40), சின்னத்தம்பி விஸ்வநாதன்- கரவெட்டி (40), சுந்தர் பாலகிருஷ்ணன் - மாலுசந்தி, அல்வாய் தெற்கு (25), ஆர்.சுரேரங்கன் (25) ஆகியோரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர்.

யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு
* CIMA - Foundation level & Intermediate
விரிவுரைகள் ஆரம்பம்
14-12-2002 காலை 9.00
* வங்கியியல் கற்கை நெறி
B.Sc(Hons), Degree & ACIB, DBF,ACBF, CBF(CIB/IBSL)
வகுப்புக்கள் நடைபெறுகின்றன
* வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள்
(யாழ்ப்பாணம் / பேராதனை)
GAQ, 1st in Com, B.A(I), B.A(II) & B.Com
விரிவுரைகள் ஆரம்பம் 15-12-2002
INQUIRIES / REGISTRATION
DIRECTOR
JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT
464,Hospital Road,
Jaffna.
(சி-295)

மிக வேகமாக விற்பனையாகின்றது
14-12-2002 இல் நடைபெறவுள்ள
எழுதுநர் சேவை / கிராமசேவகர் போட்டிப் பரீட்சை வழிகாட்டிநூல்
(திருத்திய பதிப்பு 2002 Dec)
கடந்த கால, முற்றிலும் எதிர்பார்க்கை வினாத்தாள்கள்
விடைகளுடன், (125) உளச்சார்பு வனாக்கள் மொழித்திறன் விடயம்
விரிவாக ஆக்கியோன்
திரு.P. உமாசங்கர்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, ஸ்ரீசுப்பிரமணியம், ரூபன், துர்க்கா (சுன்னாகம்) புத்தகசாலைகள்
(சி-289)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.